விலை: 30.00
viber : 076 636 3378
பக்கங்கள் : 16

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 030 வள்ளுவர் ஆண்டு 2052 தை 05 செவ்வாய்க்கிழமை (18.01.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




பொறுப்புடன் செயற்படுங்கள்

## அரசை கவிழ்க்க எத்தனிக்காதீர்கள்

பிரதமர் மகிந்த வலியுறுத்து



(கொழும்பு)

அரசை கவிழ்க்கும் முயற்சியில் எவரும் ஈடுபட வேண்டாம் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

மேலும் பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் மற்றும் அரசின் பங்காளிகள் அனைவரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

(05ஆம் பக்கம் பார்க்க)

## மாபியாக்களை முறியடிக்கவே அரிசி இறக்குமதிக்கு அனுமதி

வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல

(கொழும்பு)

புத்தாண்டு காலத்தில் சந்தையில் ஒரு கிலோகிராம் அரிசியின் விலையை 300 ரூபாய் வரையில் அதிகரிக்க அரிசி மாபியாக்கள் முன்னெ

15

பாராளுமன்றம் இன்று

## ஜனாதிபதியால் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படும்

சிம்மாசன உரையும் நிகழ்த்துவார்

(கொழும்பு)

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடரை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இன்று காலை 10 மணிக்கு வைபவ

15

## கொரோனா +688

(கொழும்பு)

நாட்டில் நேற்றும் மேலும் 688 பேருக்கு

15

## மீண்டும் ஏமாற வேண்டாம் அதிகாரத்தை தாருங்கள்

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கோரிக்கை



(பதுளை)

ராஜபக்ஷ அரசாங்கத்திடம் மக்கள் மீண்டும் ஏமாற வேண்டாம். நாட்டுக்காக சேவையாற்ற என்னிடம் அதிகாரத்தைத் தாருங்கள் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பதுளையில் நடைபெற்ற கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கட்டுக்கதைகளை எதிர்ப்போம். மீண்டும் ஏமாற்ற இடமளியோம். மாயை, அறியாமை, ஏமாற்று மற்றும் வஞ்சகம் ஆகியவற்றால் நாம் இனி ஒருபோதும் ஏமாந்து விடக் கூடாது. இதற்கெல்லாம் முற்றுப் புள்ளி வைத்து உண்மையான யதார்த்தவாத பயணத்திற்கு அணிதிரள வேண்டும் என்றும் அவர் மேலும்

15

## கொரோனா 7 பேர் பலி

(கொழும்பு)

கோவிட் தொற்றால் நாட்டில் மேலும் 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதற்கமைய நாட்டில் பதிவான கோவிட்

15

முல்லையில்

## குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - தேவிபுரம் பகுதியில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

15

## நாட்டின் நலன்கள், எதிர்காலம் குறித்து அரசு கவனிப்பதில்லை

ஜே.வி.பி குற்றச்சாட்டு

(கொழும்பு)

இந்த அரசாங்கம் நாட்டின் நலன்கள் மற்றும் எதிர்காலம் குறித்து கவனம் செலுத்தாமலேயே வெளிநாடுகளுடன் தொடர்புகொள்வதாக மக்கள் விடுதலை முன்னணி குற்றம் சாட்டியுள்ளது.

நேற்று இடம்

15

## யாழ்.பண்ணைப் பாலத்தருகில் மோட்டார் சைக்கிள் விபத்து

இளைஞன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பண்ணைப் பாலத்திற்கு அருகில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற குறித்த விபத்தில் கொக்குவில் கிழக்கை

15

சுதந்திரக் கட்சியின் முடிவின் பின்

## அமைச்சரவை மாற்றம்

ஜனாதிபதி கோட்டாபய

(கொழும்பு)

அரசிலிருந்து வெளியேறுவதா? இல்லையா? என்று சுதந்திரக் கட்சி முடிவெடுத்தபின் அமைச்சரவை மாற்றப்படும் என ஜனாதிபதி கோட்டாபய தெரிவித்துள்ளார்.

(05ஆம் பக்கம் பார்க்க)

## 3 நாட்களுக்கான எரிபொருளே கையிருப்பில்

அமைச்சர் காமினி

(கொழும்பு)

மூன்று நாட்களுக்குத் தேவையான எரிபொருள் மாத்திரமே தற்சமயம்

15

## 5ஆவது கோவிட் அலை நாட்டில் உருவாகும் ஆபத்து

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)

ஒமிக்ரோன் மாறுபாடு காரணமாக நாட்டில் ஐந்தாவது கொரோனா வைரஸ் அலை உருவாகும் அபாயம் இருப்பதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

நீண்ட வார விடுமுறையில் இடம்பெற்ற பொது கூட்டங்கள் மற்றும் ஒன்று

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (9715)

076 825 7716 (ஆகாஸ்)

# 163 பேர் குணமடைந்தனர்

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 163 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது. இதற்கமைய, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 568,373 ஆக அதிகரித்துள்ளது. (ம)

காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி A32 மெயின் றோட்டில் 1 ஆம் வீதியில் 42 பரப்புக் காணி 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு. (9717)

நாவற்குழி சந்தியிலிருந்து 300m தூரம். வீடமைப்பதற்கு நல்ல சூழல். ( நிலப்பரப்பு)
ஒரு பரப்பின் விலை 5 இலட்சம்.

076 890 9259
077 015 0353

## வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம்

## 13 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம்

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 29.01.2022 சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு வைத்திய கலாநிதி ந.சிவராஜா நினைவு மண்டபத்தில் தலைவர் வைத்திய கலாநிதி எஸ். சிவபாதமூர்த்தி அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளதனால் அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வலுவிழந்தோர் சேவையில்

திருமதி சுஜீவா சிவதாஸ்
செயலாளர்

வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம்
இல. 47/2, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.
(9711)

உமாதவா கல்வி நிலையம் - யாழ்ப்பாணம்

கல்வியாண்டு 2022 க்கான புதிய வகுப்பு ஆரம்பம்

ஆசிரியர் திரு. க. தவயோகராசா

தரம் 3 இல் கல்வி பயிலும் (2022இல்) மாணவர்களுக்கான புதிய வகுப்பு தைப்பூசத் திருநாளான இன்று 18.01.2022ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 5.00 மணிக்கு ஆரம்பமாகின்றது.

தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கான வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன.

தொடர்பு : 077 774 2942

இயக்குநர்
உமாதவா கல்வி நிலையம், யாழ்ப்பாணம். (9673)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியர்
திரு. சண்முகராஜா பரந்தாமன்
அவர்களின் அன்புத் தாயார்

திருமதி
**பாலாம்பிகை சண்முகராஜா**

அவர்கள் 17.01.2022 அன்று இறைபதம் அடைந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ யாழ். இந்து மகளிர் கல்லூரி
(C-3563)

காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி ஐயனார் கோவில் வீதியில் 18 அடிப் பாதையுடன் 7 1/2 பரப்புக் காணி 1 1/2 பரப் பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்குண்டு. (9716)

( மேட்டுநிலம், நிலப்பரப்பு )
நாவற்குழி சந்தியிலிருந்து
1/2 கிலோமீற்றர் தூரம்
ஒரு பரப்பின் விலை 3 இலட்சம்

077 658 5999
077 623 4204

# மரண அறிவித்தல்



## நடராசா சாந்தாதேவி

கிளிநொச்சியைப் பிறப்பிடமாகவும் அரியாலை யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட நடராசா சாந்தாதேவி அவர்கள் நேற்று முன்தினம் (16.01.2022) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சீதாலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னையா - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பொன்னையா நடராசா அவர்களின் பாசமிகு மனைவியும் சிவமங்களம் (அரியாலை), பதிமங்களம் (அரியாலை), சிவகுமார் (குரு ஹாட்வெயர் - கிளிநொச்சி), ரதிமங்களம் (பிரான்ஸ்), சாந்தினி (லண்டன்), சதீஸ்குமார் (கிளிநொச்சி), அமலகுமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் முருகானந்தன் (பகலவன் பல்பொருள் வாணிபம், அரியாலை), வினோஜா, சுதர்சன் (பிரான்ஸ்), குமாரதாஸ் (லண்டன்), செல்வி, சோபனா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் அபிநயா, அபிசனன், அர்ச்சனா, அஸ்வின், அபினன், அஸ்விகா ஆகியோரின் அன்பு அம்மம்மாவும் வேணுஜன், அர்ச்சனன், ஹம்சிஜன், அக்சனா, ஐஸ்வர்யா, ஆதிரா ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் 20.01.2022 (வியாழக்கிழமை) அன்று காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் (இல.138, நெடுங்குளம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்) நடைபெற்று தகனக் கிரியைகள் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல. 138, நெடுங்குளம் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

தகவல் :- குடும்பத்தினர்
077 869 1045
+44 744 701 1539
077 696 6169
(C-3562)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் கந்தன் ஆலயத்தின் நெற்புதிர் அறுவடை விழா







(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் நெற்புதிர் அறுவடை விழா நேற்றுக் காலை இடம்பெற்றது .

தைப்பூசத்தினத்துக்கு முதல் நாள் கடைப்பிடிக்கப்படும் இந்தப் பண்பாட்டு விழாவில் கோவில் அறங்காவலரும் சிவாச்சாரியாரும் முதலாவது புதிரை ஆலயத்துக்குச் சொந்தமான மட்டுவிலில் உள்ள வயலில் அறுவடை செய்தனர்.

அந்த வயலில் அறுவடை செய்யும் நெல்லில் இருந்து அமுது தயாரித்து கந்தனுக்கு படையல் செய்து பூஜைகள் இடம்பெற்றன.

இப் புதிர் விழா 288 வருட பாரம்பரியம் மிக்கது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். (நி-5-33-104)

## 13 ஆவது திருத்தம் தமிழினத்துக்கு தீர்வாகாது

# இந்தியப் பிரதமருக்கான வரைபை எதிர்த்து லண்டனில் புலம்பெயர் தமிழர்கள் ஆர்ப்பாட்டம்



(லண்டன்)

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ் உருவான 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல் செய்து தமிழர்களை ஒற்றையாட்சியின் கீழ் முடக்க முயற்சிகள் இடம்பெறுவதாக கண்டனம் தெரிவித்து பிரித்தானிய தலைநகர் லண்டனில் நேற்று முன்தினம் புலம்பெயர் தமிழர்களால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பிரித்தானிய பிரதமர் அலுவலகத்துக்கு அருகே ஒன்றுகூடிய புலம்பெயர் தமிழர்கள் 13 ஆவது திருத்தத்தை அமுல் படுத்துமாறு தமிழ்க் கட்சித் தலைவர்கள் இந்தியப் பிரத மருக்கு எழுதியுள்ள கடிதத்து க்குக் கண்டனம் தெரிவித்து கோஷங்களை எழுப்பினர்.

இலங்கையின் ஒற்றை ஆட்சியில் இருந்து விடுபட்ட சுதந்திர அரசே தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளப்படும் என அவர்கள் வலியுறுத்தினர்.

இலங்கையில் ஒற்றையாட்சி அரசியலமைப்பை தமிழர்களிடம் திணிக்கும் சதியில் சில தமிழ் அரசியல்வாதிகள் சுயநல நோக்குடன் ஈடுபட்டு வருவதாகவும் அரசியலமைப்பிலுள்ள 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தி தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யும் வகையிலான தீர்வுக்கு வழிவகுக்க வேண்டுமென கோரப்படும் ஆவணத்தை தமிழ் கட்சிகள் நீண்ட இழுபறிக்கு மத்தியில் தயாரித்துள்ளன எனவும் குற்றம் சுமத்தினர். (நி-5)

# குறைந்த வருமானம் பெறுவோருக்கு இலவச சூரிய மின் தொகுதிகள்

## மின்சக்தி அமைச்சு திட்டம்

(கொழும்பு)

குறைந்த வருமானம் பெறுவோருக்கு இலவசமாக சூரியமின் தொகுதிகளை வழங்குவதற்கு மின்சக்தி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

அடுத்த வாரம் முதல் இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளதாக அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.


அதற்கமைய, ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலிருந்தும் ஒவ்வொரு குடும்பத்தை தெரிவு செய்து, 14,000 வீடுகளுக்கு 5 வோல்ட் மற்றும் 10 வோல்ட் மின்வலு கொண்ட சூரிய மின் தொகுதிகளை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார். (நி-5)

# பால்மாவுக்கான தட்டுப்பாடு அடுத்த மாதம் வரை தொடரும்

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டிருக்கும் பால்மாவுக்கான தட்டுப்பாடு அடுத்த மாதம் நடுப்பகுதி வரை தொடரும் சாத்தியம் இருக்கிறது என பால்மா இறக்குமதியாளர்களின் சங்கம் தெரிவித்தது.

பால்மா இறக்குமதி செய்வதற்கு தேவையான டொலர் பற்றாக்குறையாக இருப்பதே இதற்குக் காரணம் எனவும் சங்கத்தின் பேச்சாளர் ஒருவர் சுட்டிக் காட்டினார். (நி-5)









கிளிநொச்சி ஜெயந்தி நகரில் அமையவுள்ள கம்பன் கலைக் கல்லூரிக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று கம்பவாரிதி இ.ஜெயராஜ் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், எம்.ஏ.சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன், சாணக்கியன் மற்றும் யாழ்.மாநகரசபை முதல்வர் வி.மணிவண்ணன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, எம்.கே. சிவாஜிலிங்கம், வடமாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டு அடிக்கல் நாட்டி வைத்தனர். (படங்கள்- சப்த சங்கரி, தேவானந்தன்)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

## வன்னியின் பெரும் போர்

# புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி 105 ஓட்டங்களால் முன்னிலையில்



(முறிகண்டி)

10 ஆவது வன்னியின் பெரும்போர் என அழைக்கப்படும் கிளிநொச்சி மகா வித்தியாலயம் மற்றும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணிகளிற்கிடையிலான நட்புக்கிண்ண கடினப்பந்து சுற்றுப்போட்டியானது நேற்று முன்தினம் கிளிநொச்சி மகா வித்தியாலய மைதானத்தில் காலை ஆரம்பமாகியது.

ஆரம்ப நிகழ்வுகளை தொடர்ந்து நாணயச் சுழற்சியில் கிளிநொச்சி மகா வித்தியாலய அணி வெற்றி பெற்று முதலில் களத்தடுப்பை தீர்மானிக்க புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணி துடுப்பெடுத்தாடியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணி 78.02 பந்து வீச்சு நிறைவில் 188 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

அதிகபட்சமாக புதுக் குடியிருப்பு மத்திய கல்லூரி அணியைச் சேர்ந்த ம.தேனுஜன் 158 பந்துகளில் 07 நான்கு ஓட்டம் அடங்கலாக 70 ஓட்டங்களைப் பெற்றார்.

சானுஜன் 22 ஓட்டங்களை அதிக பட்சமாக பெற்றிருந்தார்.

பந்து வீச்சில் கிளிநொச்சி மகா வித்தியாலய அணி சார்பாக அபிசாந், பிரவிந்தன் ஆகியோர் தலா மூன்று இலக்குகளை வீழ்த்தியிருந்தனர்.

பதிலுக்கு துடுப்பெடுத் தாடிய கிளிநொச்சி மகா வித்தியாலய அணி 17.05 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 83 ஓட்டங்களுக்கு இரண்டு இலக்குகளை இழந்த நிலையில் முதல் நாள் ஆட்டம் முடிவுக்குவந்தது.

சாத்வீகன் ஆட்டமிழக்காமல் 30 ஓட்டங்களையும், அணித்தலைவர் பிரவிந்தன் 28 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர். (4-6-100)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2490

### மியூரி

நான் பாடும் மௌனராகம் கேட்கவில்லையா?
என் காதல் ராணி இன்னும் தூங்கவில்லையா?



என்னடா முட்டாள்தனமா பேசிட்டு இருக்க
முட்டாள் பயலே... மௌனமா பாடினா
எப்படிடா கேட்கும்

### விவேக்

அரை மணி நேரமா நான் கரடியா கத்துறேன்..
நீ பதில் பேசலைன்னா என்ன அர்த்தம்



எனக்கு கரடி பாஷை புரியலேன்னு அர்த்தம்

### லக்ஷனா

என்னமா குழம்பு இது
அம்மா : கொள்ளுக் குழம்புடா.
கொள்ளா, அது குதிரையல்லா தின்னும்



அம்மா : கழுதையும் தின்னலாம்
ஒண்ணும் ஆகாது, மூடிட்டுத் தின்னு

### உசாந்தன்



பெயின்டர் சார் அந்த ஜன்னல் கம்பிக்கு கலர்
அடிக்க மறந்துட்டீங்க.....

### சிந்து

ஒருத்தன் இந்தாடா... பொங்கல் சாப்பிடுன்னு
ஒரு டப்பா குடுத்தான்
திறந்து பார்த்தா டப்பா காலியா இருக்கு...
என்னடா பொங்கல காணோம் என்று கேட்டேன்



அதுக்கு அவன்... இதான்டா காணும்
பொங்கல் என்று சொல்லிட்டு போறான்

### அஸ்வின்

தற்போதைய காட்சிகள்



தம்பி... தம்பி அதான் பொங்கல் முடிஞ்சிடுச்சில
வேலைக்கு வர வேண்டியது தானே?



வரலாம் ஆனா எனக்கு இப்ப வரப் பிடிக்கலையே

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரக் கட்சியின் முடிவின் பின்
# அமைச்சரவை மாற்றம் - ஜனாதிபதி

(கொழும்பு)

**அரசிலிருந்து வெளியேறுவதற்கான அறிகுறிகளை அதன் பங்காளியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெளிப்படுத்தியுள்ளது. எனவே, அக்கட்சியினர் தொடர்பில் முடிவொன்றை எடுத்த பின்னரே அமைச்சரவையை மறுசீரமைக்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார் என ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**



அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது. இம்மாதம் இறுதியில் இடம்பெறவிருந்த அமைச்சரவை மாற்றத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஒத்திவைத்துள்ளார் என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறிய முடிகிறது.

அரசிலிருந்து வெளியேறுவதற்கான அறிகுறிகளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெளிப்படுத்தியுள்ளது. எனவே, அக்கட்சியினர் தொடர்பில் முடிவொன்றை எடுத்த பின்னரே அமைச்சரவை மறுசீரமைக்கப்படும் எனத் தெரிய வருகிறது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களும் அரசைக் கடுமையாக விமர்சித்து வருகின்றனர். புதிய கூட்டணியொன்றை அமைக்கும் முயற்சியிலும் தீவிரம் காட்டி வருகின்றனர்.

இந்நிலையில், சுதந்திரக் கட்சியை அரசிலிருந்து வெளியேற்றுமாறு மொட்டு கட்சி தரப்பிலும் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே அமைச்சரவை மறுசீரமைப்பு பிற்போடப்பட்டுள்ளது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-5)

# அரசைக் கவிழ்க்க முயற்சிக்காது பொறுப்புடன் செயற்படுங்கள்

## பிரதமர் மகிந்த வலியுறுத்து



"ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி அரசின் கரங்களாகப் பங்காளிக் கட்சிகள் உள்ளன. அவர்கள் மிகவும் பொறுப்புடன் செயற்பட வேண்டும். அரசைக் கவிழ்க்கும் முயற்சிகளில் இவர்கள் எவரும் ஈடுபடக்கூடாது" என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ வலியுறுத்தினார்.

இது தொடர்பில் தென்னிலங்கை ஊடகம் ஒன்றிடம் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

"அரசுக்குள் இருப்பவர்களுக்குக் கருத்துச் சுதந்திரம் இருக்கிறது. அதற்காக அவர்கள் உண்மைக்கு மாறான கருத்துக்களை வெளியிடக்கூடாது. அவர்கள் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும்.

ஒரு சிலர் வெளியிடும் விமர்சனங்களை வைத்துக் கொண்டு அரசுக்குள் பெரும் பிளவு என்று ஊடகங்கள் செய்திகளை வெளியிடுகின்றன.

எனவே, ஊடகங்களும் உண்மைகளை அறிந்து பொறுப்புணர்வுடன் செய்திகளை வெளியிட வேண்டும்.

ஊடகங்களில் வரும் செய்திகளை வைத்துக்கொண்டு எதிரணியினரும் தத்தமது அரசியல் பிரசாரங்களை முன்னெடுக்கின்றனர்.

அரசை வீட்டுக்கு விரட்டியடிப்போம் என்று கூளுரைக்கும் சஜித் அணியினர் கடந்த ஆட்சியில் என்ன செய்தார்கள்? நல்லாட்சி என்ற பெயரில் நாட்டை அவர்கள் நாசமாக்கியதை மக்கள் மறக்கமாட்டார்கள்.

அதற்கான பதிலடிகளைக் கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும், பாராளுமன்றத் தேர்தலிலும் மக்கள் வழங்கியுள்ளனர்.

எமது அரசு சீரான பாதையில் பயணிக்கின்றது. மக்கள் நலன் கருதி இவ்வருடம் பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளோம்" என அவர் தெரிவித்தார். (நி-5)

# மக்களை மேலும் மேலும் சுமைக்குள் தள்ளும் அரசு

## சரத் பொன்சேகா குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கம் இந்த மக்களை மேலும் சுமைக்குள் தள்ளவே விரும்புகின்றது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய பாதகமான பொருளாதார நிலைமைக்கு இந்த அரசாங்கமே பொறுப்பு என்றும் அவர் தெரிவித்தார்.

வெளிநாட்டுக் கடன்களைப் பெற்று, அதில் சிலவற்றினை தமது பைகளுக்குள் போட்டுக்கொண்டு நாட்டின் சொத்துக்களை விற்பனை செய்து வருவதாகவும் அவர் குற்றம் சாட்டினார். (நி-5)


# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆங்கில பாட ஆசிரியை

திருமதி.**அனுசீலா நிர்மலன்**

அவர்களின் பாசமிகு கணவர்

திரு.**சண்முகராஜா நிர்மலன்**



அவர்களின் மரணச்செய்தி அறிந்து துயரடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திப்பதுடன் அவரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**ஆசிரியர் கழகம்,**
**யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை,**
**யாழ்ப்பாணம்.**

(9710)


# இராசிபலன்

**18.01.2022**
**தை 05, செவ்வாய்க்கிழமை**
**பிரதமை முழுவதும்**

**பூசம் முழுவதும்**
**சுபநேரம் -11.05- 12.35 மணிவரை**
**இராகுகாலம் -3.35-5.05 மணிவரை**

**சந்திராஷ்டமம்: மூலம்**
**தைப்பூசம்**

**வளவன்**

**மேஷம்:** எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், குடும்பத்தினருடன் மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், சுப விரயங்கள் அதிகரி க்கும் நாள்.

**ரிஷபம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**மிதுனம்:** கொடுக்கல்-வாங்கல்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு, செய் தொழிலில் முன்னேற்றம் கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**கடகம்:** கற்பனை மிகுதியான நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், போசன சுகமுண்டு, தெய்விக சிந்தனை மேலோங்கும் நாள்.

**சிம்மம்:** தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறும், மனச் சஞ்சலங்கள் அதிகரிக்கும் நாள், சுபகாரியச் செலவுகளில் தாரளம் காட்டுவீர்கள், சயன சுகக் குறைவான நாள்.

**கன்னி:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், போசன சுகமுண்டு, உறவினர்கள் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், கௌரவமான நாள்.

**துலாம்:** உறவினர்களும், நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், செய்தொழிலில் உற்சாகம் காட்டுவீர்கள், தூர தேசத்திலிருந்து மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்:** தொழில் நலன் கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், ஆன்றோர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், பித்த சம்பந்தமான ரோக பயமுண்டு.

**தனுசு:** மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், பிரயாண பயமுண்டு, பண விரயம் மேலோங்கும் நாள்.

**மகரம்:** களஸ்திர நன்மையுண்டு, பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**கும்பம்:** எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம்மாறுவர், செய் தொழிலில் முன்னேற்றம் காணும் நாள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், போசன நன்மையுண்டு.

**மீனம்:** பூர்வீகச் சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், ரோக பயமுண்டு, தாழ்ந்த சுபாவமுண்டு.

**மனச்சாட்சி ஆயிரம் சாட்சிகளுக்குச் சமம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரத்தை மீட்டெடுக்க பாடசாலைகளில்
# டிஜிற்றல் புரட்சி அவசியம்
## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(சாவகச்சேரி)

**நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க பாடசாலைகளில் கணனிக் கல்வி மற்றும் டிஜிற்றல் புரட்சி என்பன மிக அவசியமானது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**



அண்மையில் தென்மராட்சி பிரதேசத்திற்கு விஜயம் மேற்கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், ஐக்கிய மக்கள் சக்தி ஆரோக்கியம் மட்டுமன்றி கல்வி நடவடிக்கைகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து வருகிறது.

நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க கணனிக் கல்வி மற்றும் டிஜிற்றல் புரட்சி ஆகியன அவசியம். எமது செயற்றிட்டம் ஊடாக மொனராகலை மாவட்டத்தில் முதலாவது கணனிக் கல்வி ஊக்குவிப்பு செயற்றிட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அதன் பின்னர் திருகோணமலை, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகள் சிலவற்றில் கணனிக் கல்வி ஊக்குவிப்பு செயற்றிட்டம் எம்மால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் காலத்தில் ஏனைய கிராம-நகர பாடசாலைகளுக்கும் இந்த கணனி கல்வி ஊக்குவிப்பு உதவித் திட்டங்களை வழங்க எதிர் பார்த்துள்ளோம்.

அதுமாத்திரமன்றி பின்தங்கிய பாடசாலைகளில் ஆங்கிலக் கல்வியை மேம்படுத்தும் பொருட்டு சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட இலவச ஆங்கில மொழிப் பயிற்சியை ஆரம்பிக்க எண்ணியுள்ளோம் என அவர் தெரிவித்தார். (4-5-30)

## வாசிப்பும் கலந்துரையாடலும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் மொழியியல் ஆங்கிலத்துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் புகழ் பெற்ற ஆங்கில நாவலாசிரியர் அனுக அருட்பிரகாசம் பங்குபற்றும் வாசிப்பும் கலந்துரையாடலும் நிகழ்வு நாளை 19 ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

எனவே சுகாதார நடைமுறைக்கமைய அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ். பல்கலைக்கழக மொழியியல் ஆங்கிலத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ம.திருவரங்கன் அறிவித்துள்ளார். (4-5)

## ஹெரோயினுடன் இளைஞன் கைது

(நெளுக்குளம்)

வவுனியாவில் ஹெரோயின் போதைப்பொருளுடன் இளைஞர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, கொழும்பில் இருந்து வவுனியா நோக்கி பயணித்த பேருந்து நவகமுவ பகுதியில் இராணுவ புலனாய்வாளர்களினால் சோதனையிடப்பட்டது. இதன்போது 5 கிராம் ஹெரோயின் போதைப் பொருளினை உடைமையில் வைத் திருந்த 39 வயதுடைய இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டு ஈரட்டை பொலிஸில் ஒப்படைக்கப்பட்டார்.

இது தொடர்பான மேலதிக விசாரணையினை ஈரட்டைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-5-250-299)



வடமராட்சி மாலைசந்தை மைக்கல் விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த 15 ஆம் திகதி இடம்பெற்றது. (படம்: மகாலிங்கம்)

## தைப்பூச திருவிழா

(குப்பிழான்)

வரலாற்றுச் சிறப்பு மிக்க மாவிட்டபுரம் ஸ்ரீகந்தசுவாமி கோவில் தைப்பூசத் திருவிழா இன்று 18 ஆம் திகதி காலை, மாலை உற்சவங்களாக இடம் பெறவுள்ளன. (4-5-18)

## சித்தியடைந்தோர் விபரம் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தினால் நடத்தப்பட்ட 2020 ஆம் கல்வியாண்டிற்கான இளம் சைவப்புலவர் மற்றும் சைவப்புலவர் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன என அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் செயலாளர் செ.த.குமரன் அறிவித்துள்ளார். (4-5-18)

## சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நடைபெறும் வாராந்தச் சிறப்புச் சொற்பொழிவு எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் நடைபெறும்.

சிவநெறிச்செம்மல் இளஞ் சைவப்புலவர் த.மனோஜ்குமார் "கந்தபுராணமும் ஆறுமுகநாவலரும்" என்னும் விடயப்பொருளில் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவார். (4-5)

# அரசியல் கைதிகள் சிறையில் வாடுவது கவலையளிக்கிறது
## தவத்திரு வேலன் சுவாமிகள்



(யாழ்ப்பாணம்)

எமது இனத்திற்காகவும், நீதிக்காகவும் குரல் கொடுத்தவர்கள் என்ற ரீதியில் தமிழ் அரசியல் கைதிகள் எந்தவித மான நியாயமான காரணங்களும் இன்றிச் சிறைகளில் நீண்டகாலமாக வாடி வருவது மிகவும் கவலையளிக்கின்றது என தவத்திரு.வேலன் சுவாமிகள் தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை யாழ். முற்றவெளியில் நடைபெற்ற விடுதலைப் பொங்கல் நிகழ்வில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,இலங்கை அரசு ஐக்கிய நாடுகள் சபைக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாமல் தொடர்ந்து நீண்டகாலமாக அரசியல் கைதிகளைத் தடுத்து வைத்திருப்பதும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தித் தற்போதும் தொடர்ச்சியான கைதுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதையும் நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

எனவே தமிழ் அரசியல் கைதிகள் விடுதலையில் மிகவும் கரிசனை எடுத்து மிக விரைவில் அனைவரையும்விடுதலை செய்ய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (4-5-18)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நல்லூர் வடக்கு அருள்மிகு ஸ்ரீசந்திரசேகரப்பிள்ளையார் ஆலய கும்பாபிஷேகமும் பஞ்சதள இராஜகோபுர கும்பாபிஷேகமும் எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிறுக்கிழமை காலை 10.32 தொடக்கம் 11.22 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் நடைபெறவுள்ளது.

அதனை முன்னிட்டு எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை எண்ணெய்க்காப்பு நிகழ்வு இடம்பெறும் என ஆலய அறங்காவலர் குழு அறிவித்துள்ளது. (4-5-6)

# வீதிக்குக் குறுக்கே வேலி
# நகரசபையிடம் முறைப்பாடு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட கோவிற்குடியிருப்பு- கடல் வட்டாரத்தில் மக்கள் பாவனையில் இருந்த பொது வீதி ஒன்று மீண்டும் மூடி அடைக்கப்பட்டிருப்பதாக அப்பகுதி மக்கள் நகரசபையிடம் முறையிட்டுள்ளனர்.

நீண்ட காலமாக மக்கள் பயன்படுத்தி வந்த ஊரெல்லைக் கடல் நான்காம் வீதியின் கிளை ஒழுங்கை ஒன்றே இவ்வாறு தனியாரால் தன்னிச்சையாக மூடி அடைக்கப்பட்டுள்ளது.

குறித்த ஒழுங்கையை கடந்த இரண்டு மாத காலத்திற்கு முன்னர் தனியார் ஒருவர் மூடி அடைத்திருந்த நிலையில் நகரசபையினர் ஒழுங்கையை திறந்து வைத்ததுடன், மீண்டும் பாதையை அடைத்தால் அவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரித்திருந்த நிலையில் தற்போது மீண்டும் அதே பாதையை மூடி அடைத்துள்ளனர்.

குறித்த ஒழுங்கையில் ஐந்துக்கும் மேற்பட்ட குடியிருப்பாளர்களுக்கு சொந்தமான காணிகள் இருக்கும் அதேவேளை யில் இலங்கை மின்சார சபையின் மின் கம்பங்கள் நாட்டப்பட்டு மின் இணைப்பும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-5-30)

## ஆனந்தசங்கரிக்கு கொரோனா

(முறிகண்டி)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரிக்கு கொவிட் தொற்று நேற்று முன்தினம் உறுதி செய்யப்பட்டது.

இதனை அடுத்து யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகம் சுகாதாரப் பிரிவினரால் தனிமைப்படுத்தப்பட்டது.

அத்துடன் அவரது குடும்ப உறுப்பினர் மற்றும் இரண்டு மெய்ப்பாதுகாவலர்கள், சாரதி உள்ளிட்டவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (4-5-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோதுமை மா இல்லாததால் பேக்கரிகள் முடங்கும் அபாயம்

(கொழும்பு)

**எரிவாயு பற்றாக்குறை மற்றும் தரமான கோதுமை மாவு இல்லாததால் பேக்கரி தொழில் முடங்கும் நிலை உருவாகி உள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.**

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

எரிவாயு தட்டுப்பாடு காரணமாக நாட்டில் உள்ள 7 ஆயிரம் பேக்கரிகளில் சுமார் 3 ஆயிரத்து 500 பேக்கரிகள் செயலிழந்துள்ளதாக சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

இதற்கிடையில், அமெரிக்கா மற்றும் கனடாவிற்குப் பதிலாக சீனா, ரஷ்யா, இந்தியா மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் இருந்து உயர்தர கோதுமை தானியங்கள் மற்றும் மாவு இறக்குமதியானது பேக்கரி உணவு உற்பத்தியில் கடுமையான சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளது. டொலர் தட்டுப்பாடு காரணமாக தரமான கோதுமைமா இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# தனித்து களமிறங்குகிறது சுதந்திரக்கட்சி

(கொழும்பு)

எதிர்வரும் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ளது.

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் பேராசிரியர்ரோஹன லக்ஸ்மன் பியதாச இதனை தெரிவித்தார்.

5 ஆயிரம் ரூபாய் மேலதிக கொடுப்பனவை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ள போதும் மக்கள் தொகையில் 7 விகிதமானோர் மட்டுமே அரச துறை ஊழியர்கள் என சுட்டிக் காட்டினார்.

மேலும் அரசாங்கம் தொடர்ந்து அச்சிட்டே 5 ஆயிரம் ரூபாயை வழங்குகிறது.

அதிகரித்து வரும் பொருட்களின் விலையால் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் 6 இலட்சத்து 50 ஆயிரம் பேர் இரவு உணவை உட்கொள்வதில்லை என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

இந்தச் சூழ்நிலையில் பொது மக்கள் சுதந்திரக் கட்சியிடம் தீர்வை எதிர்பார்த்து வருவதாகவும் அதற்காக கட்சி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (நி-5)

# தேசிய பொருளாதார பாதிப்பு ஒப்பீட்டளவில் சீர்செய்யப்பட்டுள்ளது- மத்திய வங்கி ஆளுநர்

(கொழும்பு)

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தின் பின்னரான காலப் பகுதியில்நாட்டின்தேசிய பொருளாதாரத்திற்கு ஏற்பட்டுள்ள பாதிப்பினை தற்போது ஒப்பீட்டளவில் சீர்செய்துள்ளோம்.

அத்தியாவசிய பொருள் இறக்குமதியில் பாதிப்பு ஏற்படும் என அரசியல் மட்டத்தில் குறிப்பிடப்படும் விடயங்கள் அடிப்படையற்றவை என மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கொவிட் -19 வைரஸ் தாக்கத்தின் பின்னரான காலப் பகுதியில் நாட்டின் வெளிநாட்டு கையிருப்பில் பாரிய நெருக்கடி நிலை ஏற்பட்டது. நிலைமையினை சீர்செய்வதற்கு மத்திய வங்கி பல்வேறு திட்டங்களை செயற்படுத்தியது.

தேசிய பொருளாதாரத்திற்கு ஏற்பட்ட பாதிப்பினை தற்போது ஒப்பீட்டளவில் கட்டுப்பாட்டுக் குள் கொண்டு வந்துள்ளோம்.

மருந்து, எரிபொருள் மற்றும் உணவுப் பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருள் இறக்குமதிக்கு தொடர்ந்து முன்னுரிமை வழங்கப்படும்.

அரசியல் கோணத்தில் இருந்து பொருளாதார காரணிகளை அணுக முடியாது. பெரும்பாலான அரசியல்வாதிகள் அரசியல் நோக்கத்திற்காக பொருளாதாரம் குறித்து மக்கள் மத்தியில் தவறான நிலைப்பாட்டை தோற்றுவிக்கிறார்கள்.

பொருளாதாரத்திற்கு ஏற்பட்டுள்ள பாதிப்பை இன்னும் ஓரிரு மாதங்களில் சீர்செய்ய முடியும்.

அதற்கான திட்டங்களை தற்போது செயற்படுத்தி வருகிறோம். பல்வேறு சேவைகள் மீது விதிக்கப்பட்டுள்ள வரி எதிர்வரும் நாட்களில் குறைக்கப்படும்.

துறைமுகத்தில் தேங்கியுள்ள அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய கொள்கலன்களை விடுவிப்பதற்கு தேவையான டொலர் கட்டம் கட்டமாக விடுவிக்கப்படும்.

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் அத்தியாவசிய சேவைத்துறைகளுக்கு முன்னுரிமை கொடுப்பது அவசியமானதாகும் என அவர்தெரிவித்தார். (நி-5)


## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு:1984 இந்து
நட்சத்திரம்: சித்திரை 3
கி.பா:56 சூரி 11 செவ் 7 இல்
உயரம்:5'11"
தகைமை/தொழில்: M.Sc, USA
எதிர்பார்ப்பு: படித்தபெண்
தொ.இ: B/6664

பிறப்பு:1984 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 3
கி.பா:61 சூரி 12 செவ் 3இல்
உயரம்:5'6"
தகைமை/தொழில்:O/L சொந்தத்தொழில்
தொ.இ: B/6672

பிறப்பு:1986 இந்து
நட்சத்திரம்:பூராடம் 3
கி.பா:-47 செவ் 1 சூரி 10இல்
உயரம்:5'9"
தகைமை/தொழில்:A/L வியாபாரம்
எதிர்பார்ப்பு:- அரசதொழில்
தொ.இ: B/6692

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 3
கி.பா:65 சூரி, செவ்7இல்
தகைமை/தொழில்: A/L பிரான்ஸ்
எதிர்பார்ப்பு: பிரான்ஸ்.லண்டன் விரும்பத்தக்கது.
உள்நாடும் ஏற்கப்படும்
தொ.இ: B/6697

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 1
கி.பா:12¼ சூரி 6 செவ் 4 இல்
உயரம்:5'2"
தகைமை/தொழில்:பட்டதாரி
எதிர்பார்ப்பு:அரச உத்தியோகம் வெளிநாடு ஆயின் நிரந்தர பிரஜாவுரிமை பெற்றவர்
தொ.இ:G/6522

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்:பூரட்டாதி 1
கி.பா:-56¼ சூரி 11 செவ் 1இல்
உயரம்:5'3"
தகைமை/தொழில்:சட்டத்தரணி
எதிர்பார்ப்பு: பல்கலைக்கழக பட்டதாரி
தொ.இ:G/6525

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்:கார்த்திகை
கி.பா:32 சூரி 3 செவ் 5இல்
உயரம்:4'5"
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும் சுவிஸ், பிரான்ஸ் , லண்டன்.
தொ.இ:G/6565

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: ரோகிணி 3
கி.பா:-32 ¾ சூரி,செவ் 10இல்
உயரம்:5'4"
தகைமை/தொழில்:HNDM, GAQ
எதிர்பார்ப்பு:சைவபோசனம், அசைவமும் ஏற்கப்படும்
தொ.இ:G/6572

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


## மத்திய அதிவேக நெடுஞ்சாலை
# 12 மணிநேரத்தில் சுமார் 28 லட்சம் வருமானம்

(கொழும்பு)

மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் இரண்டாம் கட்ட நுழைவாயில் கடந்த சனிக்கிழமை ஜனாதிபதி மற்றும் பிரதமரின் அனுசரணையின் கீழ் பொதுமக்களின் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது. பாதை திறக்கப்பட்ட முதல் 12 மணி நேரத்தில் 28 இலட்சத்து 5 ஆயிரத்து 100 ரூபாய் வருமானம் கிடைத்ததாக ஆளும் தரப்பு பிரதம கொறடா நெடுஞ்சாலை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார். (நி-5)

# நான்காவது தடுப்பூசிக்கும் தயாராகும் சுகாதாரத்துறை



(கொழும்பு)

தேவையேற்பட்டால், நான்காவது தடுப்பூசி செலுத்த அரசு தயாராகவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஒமிக்ரோன் தொற்று பரவி வருகின்ற நிலையிலேயே ராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

எனினும் தேவையேற்படும் போது மட்டுமே அவற்றை கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகள் தயாராக உள்ளன என்று அவர் தெரிவித்தார்.

நாட்டில் தற்போது 3ஆவது பூஸ்டர் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# சீனாவிலிருந்து இலங்கைக்கு நன்கொடையாக அரிசி

(கொழும்பு)

சீனாவில் இருந்து இலங்கைக்கு அரிசி, நன்கொடையாக கிடைக்கும் என வர்த்தக அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார்.

1952 ஆம் ஆண்டு இலங்கை - சீன இறப்பர், அரிசி ஒப்பந்தத்தின் 70 ஆண்டு நிறைவை முன்னிட்டு இந்த நன்கொடை வழங்கப்படவுள்ளது.

நாட்டின் தற்போதைய நிலை தொடர்பாக வர்த்தக அமைச்சர், சீனத் தூதரகத்தின் சிரேஷ்ட அதிகாரியுடன் அண்மையில் கலந்துரையாடியதாகவும் அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகப் புகழ்பெற்ற அலங்கா நல்லூர் ஜல்லிக்கட்டு ஆரம்பம்




(சென்னை)

உலக புகழ்பெற்ற அலங்கா நல்லூர் ஜல்லிக்கட்டு போட்டி நேற்று ஆரம்பமானது. இந்த ஜல்லிக்கட்டு போட்டியை வணிக வரித்துறை அமைச்சர் மூர்த்தி மற்றும் ஆட்சியர் தொடங்கி வைத்தனர்.

வீரர்கள் உறுதிமொழி ஏற்று ஜல்லிக்கட்டு போட்டியில் கலந்து கொண்டனர்.

700 காளைகள் இந்த ஜல்லிக்கட்டு போட்டியில் களமிறங்கியுள்ளன. 300 மாடுபிடி வீரர்கள் இந்தப் போட்டியில் பங்கேற்றுள்ளனர்.

களமிறங்கும் காளைகள் மற்றும் வீரர்களுக்கு தலா ஒரு தங்கக்காசு பரிசாக வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் போட்டியில் தேர்வு செய்யப்படும் சிறந்த காளைக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சார்பில் கார் வழங்கப்படவுள்ளது.

அதேபோல் சிறந்த மாடு பிடி வீரருக்கு எம்.எல்.ஏ.உதயநிதி ஸ்டாலின் சார்பில் கார் பரிசளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

5 ஆயிரத்திற்கும் குறையாமல் ஒவ்வொரு காளைக்கும் பரிசுகள் வழங்கப்பட இருப்பதாக ஜல்லிக்கட்டு விழா கமிட்டிக்குழுவினர் தெரிவித்துள்ளனர். மேலும் ரி.வி, டி.வி.டி, பீரோ, கட்டில் உள்ளிட்ட சிறப்பு பரிசுகளும் வழங்கப்பட உள்ளன.

பாதுகாப்பு பணியில் ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக இந்த ஆண்டு 150 பார்வையாளர்களுக்கு மட்டுமே அனுமதி அளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# நான்காவது சோதனையை நடத்தியது வடகொரியா




(பியாங்யாங்)

பாலிஸ்டிக் ஏவுகணை எனச் சந்தேகிக்கப்படும் மற்றொரு ஏவுகணையை நேற்று திங்கட்கிழமை அதிகாலை ஏவி வடகொரியா சோதனை நடத்தியுள்ளது.

இந்த மாதத்தில் வட கொரியா நடத்திய நான்காவது ஏவுகணைச் சோதனையாக இது அமைந்துள்ளது.

அத்துடன், வடகொரிய அதிகாரிகள் ஐவருக்கு அமெரிக்கா தடை விதித்த பின்னர் ஏவப்பட்ட இரண்டாவது ஏவுகணையாகவும் இது அமைந்தது.

பதற்றங்களைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்ட பேச்சுவார்த்தைகளுக்கு திரும்புமாறு வட கொரியாவை அமெரிக்கா தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. அத்துடன், அணு ஆயுத மற்றும் பாலிஸ்டிக் ஏவுகணைச் சோதனைகளை நிறுத்துமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எனினும் எங்களது ஏவுகணைச் சோதனைகள் தற்காப்புக்கானது. எங்களின் இறையாண்மை உரிமையை உறுதி செய்யும் வகையிலேயே இச்சோதனைகள் இடம்பெறுகின்றன என வட கொரியா தெரிவித்துள்ளது.

இந்நிலையில் புதிய தடைகளை விதிப்பதன் மூலம் அமெரிக்கா திட்டமிட்டு பதற்றத்தைத் தூண்டுகிறது.

அமெரிக்காவின் தடைகளுக்கு எதிர் வினையாற்றுவோம் எனவும் வடகொரியா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# பொங்கல் விருந்தாக மாப்பிள்ளைக்கு 365 வகையான உணவுகள்

## ஆந்திராவில் அசத்தல்



(டில்லி)

பொங்கல் விருந்தாக மாப்பிள்ளைக்கு 365 வகையான உணவு வகைகள் பரிமாறப்பட்ட சம்பவம் ஆந்திர மக்களிடையே வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆந்திர மாநிலம் கிழக்கு கோதாவரி மாவட்டம் பீமாவரத்தை சேர்ந்தவர் வெங்கடேஸ்வரராவ்.

இவரது மனைவி மாதவி. தம்பதிக்கு குந்தவி என்ற மகள் உள்ளார். குந்தவிக்கு கடந்த மாதம் நிச்சயதார்த்தம் நடந்தது.

இந்த நிலையில் பொங்கல் பண்டிகையையொட்டி குந்தவியின் தாத்தா கோவிந்த், பாட்டி நாகமணி ஆகியோர் மாப்பிள்ளை சாய் கிருஷ்ணாவிற்கு விருந்து வைக்க முடிவு செய்தனர்.

அவருக்கு 100 வகையான இனிப்புகள், 30 வகையான காய்கறிகள், 30 வகையான முறுக்கு, எல் லடை, சீடை மற்றும் பழங்கள் என 365 வகையான உணவுகள் தயார் செய்து பரிமாறப்பட்டது.

பொங்கல் விருந்தாக மாப்பிள்ளைக்கு 365 வகையான உணவு வகைகள் பரிமாறப்பட்ட சம்பவம் அப்பகுதி மக்களிடம் வியப்பை ஏற்படுத்தி உள்ளது. (நி-5)

# இசைக்கருவியை தீயிட்டு கொளுத்தும் தலிபான்கள்

## வைரலாகும் வீடியோ



(காபூல்)

ஆப்கானிஸ்தான் நாட்டில் தலிபான்கள் ஆட்சி நடைபெற்று வருகிறது. இதையடுத்து அந்நாட்டில் பல்வேறு சமூக, கலாசார கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

அதில் ஒன்றாக இசையும் பல்வேறு இடங்களில் தடை செய்யப்பட்டுள் ளது.

வாகனங்களில் செல்வோர் இசை கேட்கவும், திருமணம் உள்ளிட்ட நிகழ்ச்சிகளில் இசை வாத்தியங்களை ஒலிக்கவும் தலிபான்கள் தடை விதித்திருந்தனர்.


இந்நிலையில் தற் போது உள்ளூர் இசையமைப்பாளர் ஒருவரின் இசைக்கருவிகளை பிடுங்கி நடு வீதியில் தீயிட்டு எரிக்கும் வீடியோ தற்போது இணையத்தில் வெளி யாகியுள்ளது.

ஆப்கானிஸ்தான் பாக்தியா மாகாணத்தில் எடுக்கப்பட்ட இந்த வீடியோவில் இசைய மையாளர் ஒருவரிடம் இருந்து இசைக்கருவி பிடுங்கப்பட்டு, நடுரோட்டில் தீயிட்டு எரிக்கப்படுகிறது.

இதைக் கண்டு அந்த இசையமைப்பாளர் அழுகிறார். ஆனால் தலிபான்கள் அவரின் அவலநிலையை கண்டு சிரிக்கின்றனர்.

இந்த வீடியோவை ஆப்கானிஸ்தானை சேர்ந்த பத்திரிகையாளர் ஒருவர் டுவிட்டரில் வெளியிட்டுள்ளார். (நி-5)

# எம்.ஜி.ஆரின் 105 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு பிரதமர் நரேந்திர மோடி தமிழில் வாழ்த்து





(சென்னை)

தமிழக முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆரின் 105 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு பிரதமர் மோடி வாழ்த்துத் தெரிவித்தார்.

பாரத ரத்னா எம்.ஜி. ஆரை அவரது பிறந்தநாளில் நினைவு கூருகிறேன். சமூக நீதி, அதிகாரமளித்தல் ஆகியவற்றில் முதன்மையான சிறந்த தலைவராக அவர் பரவலாகப் போற்றப்படுகிறார்.

அவரது திட்டங்கள் ஏழைமக்களின் வாழ்வில் பெரும் மாற்றத்தை கொண்டுவந்தன.

அவரது திரையுலக பெருந்திறனும் அனைவராலும் போற்றப்படுகிறது என தனது டுவிட்டர் பக்கத்தில் பிரதமர் மோடி தமிழில் பதிவிட்டுள்ளார்.

தமிழக முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆரின் 105 ஆவது பிறந்த நாள் நேற்று கொண்டாடப்பட்டது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் மாபெரும் பொங்கல் விழா நேற்றுத் திங்கட்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. மேற்படி விழாவில் யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் க.சுதாகர் பிரதம விருந்தினராகவும், அகில இலங்கை சைவமகா சபையின் செயலாளர் மருத்துவ கலாநிதி ப.நந்தகுமார் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் தமிழர் கலை, கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் விளையாட்டுக்கள் மற்றும் பொங்கல் நிகழ்வுகள் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து முற்பகல் 11 மணியளவில் திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியிலிருந்து பாரம்பரியக்கலை அம்சங்களுடனும் மங்கல வாத்திய முழக்கத்துடனும் விருந்தினர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் நோக்கி வரவேற்று அழைத்து வரப்பட்டனர். (படங்கள் :- ரவிசாந்)

# மத்திய அதிவேக வீதி

## பேருந்து கட்டணங்கள் அறிவிப்பு

(கொழும்பு)

மத்திய அதிவேக வீதியூடாக கொழும்பிலிருந்து கண்டி மற்றும் கொழும்பிலிருந்து குருநாகல் வரையிலான புதிய பேருந்து கட்டணங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அதற்கிணங்க, கொழும்பிலிருந்து குருநாகலுக்கான கட்டணம் 390 ரூபாவாகும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் நிலான் மிரண்டா தெரிவித்தார்.

அத்துடன், கொழும்பிலிருந்து கண்டிக்கான கட்டணம் 500 ரூபாவாகும் எனவும் அவர் தெரிவித்தார். (4-5)

# மருமகன் தாக்கியதில் மாமனார் பலி

## திருமண வைபவத்தில் சம்பவம்

(கொழும்பு)

திஸ்ஸமஹாராம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வீரஹெல பகுதியில் இடம்பெற்ற திருமண வைபவத்தில் மருமகனின் தாக்குதலுக்கு உள்ளாகிய மாமனார் உயிரிழந்துள்ளார்.

பாதிக்கப்பட்ட நபர் கழுத்து அறுக்கப்பட்டு படுகாயமடைந்த நிலையில் தெபரவெள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இவ்வாறு உயிரிழந்தவர் 54 வயதுடைய லுணுகம்வெஹெர பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர் அடையாளங்காணப்பட்டுள்ள போதிலும் அவர் பிரதேசத்திலிருந்து தப்பிச் சென்று தலைமறைவாகியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் திஸ்ஸமஹாராம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-5)

# திருகோணமலையில் மீண்டும் எகிறும் தொற்று

(திருமலை)

கிழக்கு பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாக மாணவர்கள் 13 பேர் கொரோனாத் தொற்று காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காய்ச்சல், இருமல் காரணமாக கடந்த சனிக்கிழமை திருகோணமலை பொது மருத்துவமனைக்கு வருகை தந்த போது, மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையின் மூலம் தொற்று உறுதி செய்யப்பட்டது.

மீண்டும் திருகோணமலையில் தொற்று பரவி வருவதால் கடுமையான சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றுமாறும் சுகாதாரத் திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது. (4-5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 450 | 400 | 450 | 400 |
| உருளைக்கிழங்கு | 160 | 160 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 600 | 700 | 450 | 600 |
| தக்காளி | 180 | 170 | 180 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 70 | 70 | 50 |
| கோவா | 280 | 240 | 280 | 300 |
| கரட் | 350 | 440 | 460 | 500 |
| பூசணி | 120 | 100 | 130 | 160 |
| புடோல் | 250 | 250 | 200 | 240 |
| வாழைக்காய் | 60 | 70 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 200 | 150-250 | 400 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | 200 | 250 |
| பாகற்காய் | 350 | 300 | 350 | 400 |
| வெண்டிக்காய் | 200 | 240 | 150 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 100 | 140 |
| பயற்றங்காய் | 500 | 500 | 500 | 400 |
| லீக்ஸ் | 350 | 260 | 280 | 350 |
| பீற்றூட் | — | 300 | — | 400 |
| கறிமிளகாய் | 450 | 600 | 600 | 600 |
| முருங்கைக்காய் | — | 1000 | 1200 | 1000 |
| போஞ்சி | 350 | 250 | 370 | 400 |
| கத்தரிதம்புள்ள | 420 | 350 | — | 360 |
| கீரை - 1 பிடி | 80 | 70 | 100 | 100 |
| தேசிக்காய் | 150 | 150 | 140 | 240 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60-80 | 70-100 |
| இராசவள்ளி | 200 | 240 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 260 | 400 | 450 | 450 |
| முள்ளங்கி | 140 | 100 | 150 | 80 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 100 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 50 | 40 |
| ஈரப்பலா | 140 | 100 | 80 | 120 |

# 208 ஒமிக்ரோன் தொற்றாளர்கள் நாட்டில் இதுவரை அடையாளம்

(கொழும்பு)

**நாட்டில் இதுவரை 208 ஒமிக்ரோன் தொற்று நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர் என்று ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் மருத்துவபீட ஒவ்வாமை, மூலக்கூற்று நுண்ணுயிர் பிரிவின் தலைவரான கலாநிதி சந்திம ஜீவந்தர தெரிவித்தார்.**

டெல்டாவை முந்திக்கொண்டு ஒமிக்ரோன் திரிபு வேகமாகப் பரவும் நிலை காணப்படுவதால் இலங்கையின் முக்கிய வைரஸாக ஒமிக்ரோன் வைரஸை தற்போது குறிப்பிட முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

புதிதாக இனங்காணப்பட்டுள்ள ஒமிக்ரோன் வைரஸ் தொற்று நோயாளர்களில் பெரும்பாலானோர் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து வெளிநாடுகளுக்குச் செல்வதற்காக வந்திருந்தவர்கள் என்றும், அவர்கள் கொழும்பு, கம்பஹா, காலி, மாத்தறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களை வதிவிடமாகக் கொண்டவர்கள் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதற்கிணங்க நாட்டில் ஒமிக்ரோன் வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை 208 ஆக அதிகரித்துள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (4-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தை மாத இராசி பலன்கள்

## 14.01.2022 - 12.02.2022



**ஒரே நேரத்தில் பல வேலை செய்து ஆச்சரியப்படுத்தும் மிதுன இராசி வாசகர்களே!**

தை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் குரு பகவான் உங்கள் இராசியைப் பார்க்கிறார். இராசிநாதன் புதன், சுக்கிரனோடு இணைந்து 'புத சுக்கிர யோகத்தை உருவாக்குகிறார். எனவே தனவரவு தாராளமாகும். தொழில் வளம் சிறப்பாக இருக்கும்.

### சூரியன் - சனி சேர்க்கை

உங்கள் இராசிக்கு 8 ஆம் இடத்தில் சூரியனும், சனியும் சேர்ந்திருக்கிறார்கள். இது அவ்வளவு நல்லதல்ல. அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கத்தோடு பகைக்கிரகமும் சேர்க்கை பெற்றிருப்பதால் மிகுந்த கவனத்தோடு செயற்படுவது நல்லது. குடும்ப பிரச்சினை தலைதூக்கும். ஆயினும் குரு பார்வை இருப்பதால், எதையும் சமாளித்து விடுவீர்கள். சில புது முயற்சிகளில் தடைகள் ஏற்படத்தான் செய்யும். வீடு மாற்றங்கள், இடமாற்றங்கள், உத்தியோக மாற்றங்கள் ஏற்பட்டாலும் அது திருப்தியாக இருக்காது.

### புத சுக்கிர யோகம்

உங்கள் இராசிக்கு 7 ஆம் இடத்தில் புதனும், சுக்கிரனும் இணைந்து சஞ்சரிக்கிறார்கள். இராசிநாதனாக புதன் விளங்குவதாலும், பஞ்சமாதிபதியாக சுக்கிரன் அமைவதாலும் இந்த சேர்க்கை நன்மை தரும் சேர்க்கைதான். கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும். ஆடை-ஆபரண சேர்க்கை உண்டு.

பயணங்கள் பலன் தருவதாக அமையும். பிள்ளைகளால் ஏற்பட்ட பிரச்சினைகளை ஒரு வழியாக சமாளிப்பீர்கள். பூர்வீகச் சொத்துக்களை பாகப்பிரிவினை செய்வதில் ஒரு நல்ல

## கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும்!

முடிவு வரும். புனிதப் பயணங்களும் அதிகரிக்கும்.

### தனுசு செவ்வாய் சஞ்சாரம்

இதுவரை உங்கள் இராசிக்கு 6 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த செவ்வாய், இப்பொழுது சப்தம ஸ்தானத்திற்கு வரப் போகிறார். உங்கள் இராசிக்கு 6, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் தை 4 ஆம் திகதி தனுசில் சஞ்சரிக்கும் பொழுது, தொழில் முயற்சியில் பலன் கிடைக்கும்.

புதிய கூட்டாளிகள் வந்திணைவர். புதிய தொழில் தொடங்குவது பற்றி




சிந்திப்பீர்கள். 'வாங்கிப் போட்ட இடத்தில், இன்னும் கட்டடம் கட்ட முடியவில்லையே' என்ற கவலை இனி மாறும்.

### மகர புதன் சஞ்சாரம்

தை 27 ஆம் திகதி, மகர இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிநாதன் அஷ்டமத்தில் மறைவது யோகம்தான். மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் கிடைக்கும். அங்குள்ள சூரியனோடு இணைந்து 'புத ஆதித்ய யோகத்தை உருவாக்குவதால், பிள்ளைகளின் மேற்படிப்பு சம்பந்தமாக ஏதேனும் முயற்சி செய்திருந்தால் அதில் வெற்றிகள் கிடைக்கும். சுப காரியங்கள் நடைபெறும்,

மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக் கசப்புகள் மாறும். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்திணையும். ஆரோக்கியம் சீராக, மாற்று மருத்துவம் கைகொடுக்கும். இந்த மாதம் லட்சுமி வழிபாடு இனிமையைத் தரும்.

### பெண்களுக்கான பலன்கள்

உடல்நலம் சீராகி உற்சாகப்படுத்தும். உத்தியோகத்தில் மாற்றங்கள் வருவதை ஏற்றுக்கொள்வதே நல்லது. கணவன் - மனைவிக்குள் பாசமும், நேசமும் அதிகரிக்கும். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

வீடு மாற்றங்கள் உறுதியாகலாம். பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு, புதிய பொறுப்புகள் கிடைக்கும். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்ளுங்கள்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**இலட்சியத்தோடு வாழ்க்கை நடத்த வேண்டுமென்று நினைக்கும் கடக இராசி வாசகர்களே!**

தை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிக்கு 7 ஆம் இடத்தில் சனி சஞ்சரித்து, 'கண்டகச் சனி'யாக விளங்குகிறார். மேலும் குரு பகவான் அஷ்டமத்தில் சஞ்சரிக்கிறார். தனாதிபதி சூரியன் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரித்து உங்கள் இராசியைப் பார்ப்பதால் தனவரவு

## விபரீத இராஜயோகம் ஏற்படப் போகிறது!

திருப்திகரமாக இருக்கும். உடல்நலத்தில் கவனம் தேவை.

### சூரியன் - சனி சேர்க்கை

உங்கள் இராசிக்கு 2 ஆம் இடமான தன ஸ்தானத்திற்கு அதிபதியானவர், சூரியன். அவர், சப்தம -அஷ்டம ஸ்தானத்திற்கு அதிபதியான சனியோடு இணைந்து சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. பணம் வந்த மறுநிமிடமே செலவாகி விடும். இரண்டு பகைக் கிரகங்களின் சேர்க்கை இருக்கும் பொழுதெல்லாம், மிக கவனத்தோடு செயற்பட வேண்டும். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாவதில் போராட்டம் அதிகரிக்கும்.

எந்தக் காரியத்தையும், எடுத்தோம், முடித்தோம் என்று செய்ய இயலாது. அதிகாரிகளால், அரசு வழி காரியங்கள் தடைப்படலாம்.

பெரியவர்களின் ஆலோசனையும், அனுபவஸ்தர்களின் அறிவுரையும் முன்னேற்றம் தரும்.

### புத சுக்கிர யோகம்

உங்கள் இராசிக்கு 6 ஆம் இடத்தில் புதனும், சுக்கிரனும் சஞ்சரிக்கிறார்கள். 10 இற்கு அதிபதியான புதன், 6 இல் சஞ்சரிக்கும் பொழுது, 'விபரீத இராஜ யோகம்' ஏற்படப்போகிறது. எனவே திடீர் முன்னேற்றம் வரலாம். புதிய வாகன யோகம், வீடு வாங்கும் யோகம் உண்டு. பொது வாழ்வில் புதிய பொறுப்புகள் தேடிவரும்.

சொத்துக்களில் இருந்த வில்லங்கங்கள் அகலும். ஆடை-ஆபரணச் சேர்க்கை உண்டு.

### தனுசு செவ்வாய் சஞ்சாரம்

இதுவரை உங்கள் இராசிக்கு பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த செவ்வாய், இப்பொழுது 6 ஆம் இடத்தில் அடியெடுத்து வைக்கப் போகிறார்.

இந்த நிகழ்வு தை 4 ஆம் திகதி நடைபெறப் போகிறது. தொழில் ஸ்தானாதிபதியாக விளங்கும் செவ்வாய் 6




இல் வரும் பொழுது, ஜீவன ஸ்தானம் பலப்படும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கலாம். தொழிலில் புதிய ஒப்பந்தங்கள் வரலாம். கூட்டுத் தொழில், தனித் தொழிலாக மாற எடுத்த முயற்சி கைகூடும்.

### மகர புதன் சஞ்சாரம்

தை 27 ஆம் திகதி, மகர இராசிக்கு புதன் செல்கிறார்.

எனவே மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக் கசப்பு மாறும். வளர்ச்சிப் பாதைக்கு வழிகாட்ட நண்பர்கள் காத்திருப்பர். மகரத்தில் சூரியனோடு புதன் இணைவதால், 'புத ஆதித்ய யோகம்' உருவாகி றது.

இதனால் கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி வெற்றியாகும். பழைய வாகனங்களைக் கொடுத்துவிட்டுப் புதிய வாகனங்கள் வாங்க முயற்சிப்பீர்கள். இம்மாதம் வராகி அம்மன் வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும்.

### பெண்களுக்கான பலன்கள்

குடும்பச்சுமை கூடும் மாதம் இது. கொடுக்கல் - வாங்கல்களில் பிரச்சினைகள் அதிகரிக்கும். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமைக் குறைவு ஏற்படாமல் இருக்க ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்படுங்கள். ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். இடமாற்றம், வீடு மாற்றம் ஒரு சிலருக்கு வரலாம்.

'பிள்ளைகளாலும், பிறராலும் பிரச்சினைகள் வருகிறதே' என்று கவலைப்படுவீர்கள். பணிபுரியும் பெண்களுக்கு கேட்ட சலுகைகள் தாமதமாகலாம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடத்திட்டத்தை பூர்த்தி செய்யாது

# பரீட்சைகளை நடத்துவது அநீதியாகும்

## எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

**பாடத்திட்டத்தை உரிய வகையில் பூர்த்தி செய்யாது, உயர்தர பரீட்சையினை நடத்த முற்படுவது, மாணவர்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.**

ஹற்றனில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைத்த போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் காரணமாக இணைய வழி கற்பித்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

எவ்வாறாயினும், அதனை பெற்றுக்கொள்வதில் மாணவர்களுக்கு பாரிய அசௌகரியங்கள் ஏற்பட்டிருந்தன.

சிலருக்கு தொழில்நுட்ப வசதிகள் கிடைத்திருக்கவில்லை.

ஆனால் முழுமையான பாடத்திட்டத்தையும் உள்ளடக்கிய வாறு பரீட்சைகளுக்கான வினாப்பத்திரங்களைத் தயாரிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது மாணவர்களுக்கு இழைக்கப்படும் பாரிய அநீதியாகும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். (நி-5)



# கார் - டிப்பர் நேருக்குநேர் மோதல்

# மூவர் உயிரிழப்பு, ஐவர் காயம்

(அம்பாறை)

அம்பாறை தமனையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் மூவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் இந்த விபத்தில் ஐவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கார் - டிப்பர் ரக வாகனம் நேருக்குநேர் மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளது.



விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி-5)

# அரசாங்கத்தை விமர்சிப்பவர்களை பதவி நீக்குவது சிறந்தது- இந்திக

(கொழும்பு)

அரசாங்கத்தில் இருந்து கொண்டு அரசாங்கத்தை விமர்சிப்பவர்களின் அமைச்சுப் பதவிகளை நீக்குமாறும் திறமையானவர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்குவது குறித்தும் கவனம் செலுத்தப்பட வேண்டும் எனவும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த தெரிவித்தார்.

கம்பஹா பகுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அரசாங்கத்தை பொது இடங்களில் விமர்சிக்கும் அமைச்சர்கள் அமைச்சரவைக் கூட்டத்தின் போதோ, குழுக் கூட்டத்தின் போதோ தங்களின் பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதியிடம் கருத்துரைப்பதில்லை.

தேர்தல் காலத்தில் விருப்பு வாக்குகளை அதிகரித்துக் கொள்வதற்காக அரசாங்கத்தின் கொள்கைகளை கடுமையாக விமர்சிக்கிறார்கள்.

அரசாங்கத்தில் இருந்து கொண்டு அரசாங்கத்தை விமர்சிப்பவர்களின் அமைச்சு பதவிகளை நீக்குமாறு ஜனாதிபதியிடம் மீண்டும் வலியுறுத்தவுள்ளோம்.

ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் அரச வரப்பிரசாதங்களை முழுமையாக அனுபவித்துக் கொண்டு அரசாங்கத்தின் கொள்கைகளை மக்கள் மத்தியில் விமர்சிக்கும் போது அரசாங்கம் மீது மக்கள் மத்தியில் தவறான நிலைப்பாடே தோற்றம் பெறும்.

அரசாங்கத்தின் கொள்கைகளை விமர்சிப்பவர்களை பதவி நீக்கி திறமையானவர்களுக்கு அப்பதவிகளை வழங்குவது அவசியமாகும்.

பொதுஜன பெரமுனவின் திறமையான உறுப்பினர்கள் பலர் அரசாங்கத்தின் கொள்கைக்கு அமைய செயற்படுகிறார்கள்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் உறுப்பினர்கள் மீண்டும் ஆட்சியதிகாரத்தை கைப்பற்றவே அரசாங்கத்தில் இருந்து கொண்டு அரசாங்கத்தின் கொள்கைகளை விமர்சிக்கிறார்கள்.

ஆட்சியதிகாரத்தை எவரிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை நாட்டு மக்கள் தீர்மானிப்பார்கள் என இந்திக தெரிவித்தார். (நி-5)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## உணர்கிறேன்

நாம் பட்ட துன்பத்தையோ மேற்கொள்ளப் போகும் சிரமத்தையோ அவற்றோடு சம்பந்தப்பட்டவர்கள் உணர்கிறார்களா என்பதிலேயே பலர் குறியாக இருக்கிறார்கள்.

இந்த ஆர்வத்திற்குக் காரணம், நம் உழைப்புக்கு அங்கீகாரம் உள்ளதா? என்பதை மனித மனம் அறிய விரும்புவதே.

எந்த உதவிக்காக யாரை அணுகினாலும், அல்லது எந்த உதவியைப் பெற்றுக் காரியத்தை முடித்துக் கொண்டாலும், அவர்கள் முயற்சியை நாம் உணர்ந்ததாக வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளாவிட்டால் அதன் மூலம் மிகுந்த வருத்தத்தை நாம் சம்பாதித்துக் கொள்ள நேரிடும். உடற் சிரமமும் உள்ளச் சிரமமும் மேற்கொண்டு நமக்கென ஒரு பணியை முடித்துத் தரும் அன்பர்களிடம் வாய்ச்சிரமம் பார்த்தால் எப்படி?

ஒரு திருமணத்தில் கலந்து கொள்ளும் பெரும்பாலோர், திருமணத்துடன் சம்பந்தப்பட்ட நபர்கள் நாம் வந்ததை அவர்கள் அறிந்திருக்கிறார்களா? எப்படியாவது நாம் வந்ததை அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டுமே? இல்லையெனில் வந்தும் பயனில்லாமல் போய் விடுமே? என்றெல்லாம் வருகைப் பதிவேட்டில் குறியீடு இடுவதிலேயே குறிப்பாக இருக்கிறார்கள் அல்லவா? அதை ஒட்டிய உணர்வு தான் இதுவும். முன்பின் தெரியாத ஒருவர் நமக்காக உழைக்கிறார் என்றால் அவர் பட்ட பாட்டை– அவர் உழைப்பை– அவருக்குக் கொடுக்கும் ஒரு தொகையின் மூலம் அங்கீகரிக்கப் போகிறோம். ஆனால், பணத்தை நீட்டினால் நம்மீது சீறும் பாம்பாக மாறுபவர்களுக்குச் சில இதமான வார்த்தைகளைச் சொல்வதைத் தவிர வேறு நாம் என்ன பிரதி உபகாரம் செய்துவிடப் போகிறோம்?

நான் எப்படியெல்லாம் கஷ்டப்பட்டேன்? அதை ஈடு செய்யும் வகையில் ஒரு வார்த்தைகூட சொல்லவில்லையே? கண்டு கொள்ளக்கூட இல்லையே? என்றெல்லாம் ஒருவர் புலம்ப ஆரம்பிக்கு முன்...நாமே அதற்கு அடியெடுத்துக் கொடுத்துவிட வேண்டும். அதாவது–

நான் உங்களுக்குக் கொடுத்திருக்கும் பணி சிரமமானது தான் (அல்லது நீங்கள் எனக்குச் செய்து தந்திருக்கும் காரியம் கடினமானது தான்).

எல்லோராலும் அதைச் செய்துவிட முடியாதுதான். இருப்பினும் இதை உங்களிடம் ஒப்படைப்பதைத் தவிர சிறப்பான வழியோ வேறு நபரோ எனக்குத் தோன்றவில்லை என்றெல்லாம் அவரவர்கள் தத்தம் சூழ்நிலைகளைப் பொறுத்து சில இதமான வார்த்தைகளைக் கூற வேண்டும்.

இத்தகைய சொற்கள் செவியில் நுழைந்து மூளையில் கலந்து, மேலும் உற்சாகத்தோடு நமக்கெனப் பாடுபடுவதற்கான உத்வேகத்தை மற்றவர்களுக்குக் கொடுக்கும் இச் சொற்கள் உடல் வலிக்கும் உள்ளச் சோர்வுக்கும் இதமான ஒத்தடங்கள்.

மேலும், ஆகப்போகும் வேலைகளுக்கும் ஊக்கம் அளிக்கவல்லவை. இவற்றை நேரடியாகச் சம்பந்தப்பட்டவர்களிடம் சொல்வதைவிட மற்றவர்களையும் வைத்துக் கொண்டு சொல்வது மிகுந்த பலனை அளிக்கும். நம் மகிழ்ச்சியையும் நன்றியுணர்வையும் வெளிப்படுத்த இதுவே அற்புதமான வழி.

கடமைக்குத்தானே செய்தார்கள்; எதையோ எதிர்பார்த்துத்தானே செய்தார்கள்; நாம் முன்பு செய்ததற்காகத்தானே இப்போது செய்தார்கள் என்றெல்லாம், நம்மை நாமே சமாதானப்படுத்திக் கொண்டு, மௌனச் சாமியாராய் இருந்து கொண்டால்–


பொறுப்பற்றவர், நன்றியுணர்வு இல்லாதவர், மனிதாபிமானம் இல்லாதவர், எதைப் பற்றியும் கவலைப்படாவர் என்றெல்லாம் பல்வேறு குற்றச்சாட்டுக்களுக்கு நாம் ஆளாக நேரிடும். மாறாக, இந்த முறையை நாம் பின்பற்றுவோமேயானால், நமக்கென உழைக்கவும் உதவவும்–பலரும் உற்சாகமாகவும் உண்மையான விருப்பத்தோடும் முன்வரத் தயங்கமாட்டார்கள்.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

## யானையும் நாயும்



ஆனால் நாயைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. விலங்குகளைப் பற்றி நன்கு அறிந்த மதியூகியான தனது அமைச்சரை அழைத்தான் அரசன்.

**மன்னன்:** மந்திரி அவர்களே யானை கொட்டடிக்கு சென்று யானையின் நிலைமையை ஆராய்ந்து என்னிடம் கூறும்.

யானை மிகவும் கவலையுடன் கொட்டடியில் இருப்பதைக் கண்டார் மதியூகியான அமைச்சர் யானையை உற்று நோக்கிய படி யானைப் பாகனிடம்

**மந்திரி:** யானையின் உடம்பில் எந்த அறிகுறியும் காணப்படவில்லை. பின் ஏன் இத்தனை சோர்வாக வாட்டத்துடன் காணப்படுகி ன்றது. யாரையோ பிரிந்த ஏக்கத்தில் மிகவும் மனவாட்டத்துடன் காண ப்படுகின்றது. இந்த யானை யாரோடு நெருங்கிப் பழகியது என்று தெரியுமா.

**யானைப் பாகன்:** இங்கு ஒரு நாய் ஒன்று நம் யானையுடன் உண்டு உறங்கி விளையாடி வருவது உண்டு. அதை ஒரு வழிப்போக்கன் சில நாட்களுக்கு முன் கொண்டு சென்றான்.

**மந்திரி:** எங்கே அந்த நாய்

**யானைப் பாகன்:** எனக்குத் தெரியாது

**மந்திரி:** அரசே எனது கருத்துப்படி நமது அரண்மனை யானை ஒரு நாயின் பிரிவினால் தான் வருத்தமாய் இருக்கின்றது.

**மன்னன்:** எங்கே இருக்கின்றது அந்த நாய்.

**மந்திரி:** யாரோ வழிப்போக்கன் கொண்டு சென்றதாக யானைப் பாகன்சொன்னான்போன இடம் தெரியவில்லை.

**மன்னன்:** எப்படி அதை அழைத்து வந்து எமது யானையை மகிழ்ச்சிப்படுத்துவீர்கள் சொல்லுங்கள்.

**மந்திரி:** அரசே நாயை சிறை பிடித்தவர் யாராயினும் அரச தண்டனையை அனுபவிக்க நேரும் என்று ஆணையிடுங்கள்.

**முரசு அறிவிப்பவன்:** கேளுங்கள் கவனமாய் எல்லோரும் கவனமா ய்க் கேளுங்கள். நாயை வைத்திருப்பவர் யாராயி னும் அவர்கள் அரசரின் தண்டனைக்கு உள்ளாவீர்கள். இது அரசரின் ஆணை.

அரசரின் ஆணையைக் கேட்டதும் நாயை வாங்கியவன் மெல்ல அதனை கட்டிய கயிறுகளை அவிழ்த்து விட்டான். கட்டுகளில் இருந்து விடுபட்ட நாய் பாய் ந்து ஓடி யானையின் கொட்டடிக்குள் சென்றது.

நாயைக் கண்ட யானை மகிழ்ச்சியுடன் தனது தும்பிக்கையால் கட்டியணைத்து அதனை தூக்கி தனது மேல் இருக்கும் படி செய்தது.

நாயின் வாலாட்டத்தைக் கண்ட யானையின் கண்களில் மகிழ்ச்சி பொங்கியது. யானையின் மகிழ்ச்சியைக் கண்ட அரசனும் திருப்தியடைந்தான்.


மந்திரியின் மதியூகமான செயலை பாராட்டி பரிசளித்தான் . யானையும் நாயும் எப்போதும் மகிழ்வுடன் வாழ்ந்து வந்தன.

குழந்தைகளே என்ன புரிந்து கொண்டீர்கள் இந்த கதையிலிருந்து. யானையும் நாயும் எவ்வளவு நட்பாக இருந்தது பார்த்தீர்களா. நட்பைப் போல் ஓர் உயர்ந்த உறவு இந்த உலகத்திலே இல்லை. உண்மையான நண்பர்கள் என்றும் பிரிவதில்லை.

இந்த கதையின் நீதி ஏன்ன வென்றால் உற்ற நண்பர்களுக்குள் பிரிவு ஏற்படாது அப்படியே நிகழ்ந்தாலும் அவர்கள் மீண்டும் இணைவது உறுதி. ஏனென்றால் நண்பர்களைப் பிரிந்து இருக்க முடியாதல்லவா.

(முற்றும்)

# மகாபாரதம்




தருமரின் அஸ்வமேத யாகத்தின் சிறப்பை எண்ணி இங்கு வந்து படுத்துப் புரண்டேன். எனது உடலின்மறு பாதி பொன்னிறமாக மாறவில்லை.

ஆதலால் "இந்த யாகம் ஒருபிடி மாவுக்கு இணையில்லை" என்று கூறினேன்.

முன்பு ஒரு பிடி மாவு என் பாதி உடலை பொன்னிறம் ஆக்கியது. இந்த யாகத்தால் அப்படி செய்ய இயலவில்லை. அதனால் இஃது அதற்கு ஈடாகாது என்பது என் கருத்து" என்று கூறி அந்தக் கீரி (தர்மதேவதை) மறைந்தது.

இதனால் நேர்மையான வழியில் பொருளைச் சேர்த்துத் தூய உள்ளத்துடன் செய்யப்படும் சிறிய தானம் கூட ஆரவாரத்துடன் ஆயிரம் ஆயிரமாக வழங்கிக் காண்போரைப் பிரம்மிக்க வைக்கும் அஸ்வமேத யாகத்தை விடச் சிறந்ததாகும் என்ற உண்மை புலப்படுகிறது.

### கிருஷ்ணர் துவாரகை சென்றார்

அஸ்வமேத யாகம் முடிவுற்றது. வந்திருந்த மகரிஷிகளும், மன்னர்களும், மக்களும் கிருஷ்ணரை பணிந்து வணங்கினர். கண்ணன் அனைவருக்கும் நல்லறக் கருத்துகளைக் கூறி ஆசி வழங்கினார். பின் கண்ணன் துவாரகைக்குத் திரும்பிச் செல்ல விரும்பினார். தேவர்களும், பிரம்மரிஷிகளும் யோகிக ளும் பல்துறை வல்லுநர்க ளும் இனிக் கண்ணனை துவாரகையில் கண்டு தரிசிப்போம் எனக் கருதினர்.

கண்ணனை பிரிய மனமில்லாத பாண்டவர்கள் வருத்தம் மேலிட, தலை மேல் கை வைத்து வணங்கிக் கண்ணீர் மல்க ஒன்றும் பேசாது மௌனமாய் இருந்தனர். கண்ணனும் மனம் நெகிழ்ந்தார். வியாசர், திருதராட்டிரன், விதுரர், காந்தாரி, திரௌபதி ஆகியோரிடம் விடை பெற்றுக் கொண்டு தேரில் புறப்பட்டார் கண்ணன்.

அன்பு மேலிட பாண்டவரும் தேரில் ஏறினர். தருமர் சாரதியாகி குதிரையின் கடிவாளக் கயிறுகளைப் பிடித்தார்.

அருச்சுனன் தங்க மயமான விசிறி கொண்டு பகவானுக்கு அருகில் இருந்து வீசினான். பீமன் ஸ்வர்ணமயமான குடையைப் பிடித்தான். நகுல, சகாதேவன் சாமரம் வீசினர்.

தேர் சில காத தூரம் சென்றதும், கண்ணன் தன்னை வணங்கிய பாண்டவர்களுக்கு ஆசி வழங்கி அவர்களை அஸ்தினாபுரத்திற்குச் செல்லும்படி அனுப்பிவிட்டு துவாரகை சென்றார்.

அஸ்தினாபுரம் சென்ற பாண்டவர்கள் கண்ணனை நெஞ்சிலிரு த்தி அவரது நினைவா கவே வாழ்ந்து வரலாயினர்.

### ஆஸ்ரம வாசப் பருவம் (துறவு வாழ்க்கை பற்றி)

பிதாமகர் பீஷ்மரையும், துரோணரையும், கர்ணனையும், துரியோதனன் முதலான தம்பியரையும், எண்ணற்ற வீரர்களையும் யுத்தகளத்தில் இழந்த பின் பெற்ற அரசாட்சியில் தருமருக்கு மகிழ்ச்சி ஏதுமில்லை.

நாடாளும் மன்னன் என்னும் பெருமிதமும் இல்லை. நாட்டைக் காவல் புரியும் ஒரு காவல்காரனாகவே தம்மைக் கருதி நாட்டை ஆளத் தொடங்கினார்.

முப்பத்தாறு ஆண்டுகள் தருமரின் ஆட்சி நீடித்திருந்தது. தருமநெறி எங்கும் தழைத்து ஓங்கியது. நூறு பிள்ளைகளை பறி கொடுத்த திருதராட்டிரனையும், காந்தாரியையும் தனது இரு கண்களைப் போல் கருதிப் பாதுகாத்து வந்தார். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவே ஒருவனின் உண்மையான பலம்.
– பிரான்சிஸ் பேகன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பாகுபலியில் இராஜமாதா சிவகாமி இலங்கையில் இராஜமாதா சந்திரிகா

இலங்கையின் பொருளாதார நிலைமை நாளுக்கு நாள் மிக மோசமாகி வருகிறது.

உணவுப் பொருட்களின் விலையேற்றம் காரணமாக பொதுமக்கள் பட்டினியின் அவலத்துக்கு ஆளாகி வருகின்றனர்.

இதற்கு மேலாக, பணத்தாள்களைக் கண்டபாட்டில் அச்சிட்டு வெளியிடுகின்ற காரியம் பொருளியல் தத்துவங்களை மீறி நடந்தாகின்றன.

பொதுவில் பணவீக்கம் என்றால், கூடிய பணம் குறைந்த பொருட்களைத் துரத்துவது என்று விளக்கம் கொடுப்பது வழக்கம்.

அதாவது நாட்டில் ஏகப்பட்ட பணத்தாள் அச்சிடப்பட்டுள்ளது.

அதனால் பணம் குவிந்து கிடக்கிறது. அதேநேரம் இப்பணத்துக்கு உலக சந்தை யில் பெறுமதியும் இல்லை. உள்நாட்டில் பொருள் உற்பத்தியும் மிக மந்தமாக உள்ளது.

இந்த நிலையில் அதிகூடிய பணம் குறைந்த பொருட்களைத் துரத்தும்போது, யார் கூடிய பணத்தைக் கொடுக்கிறார்களோ அவர்களுக்கு அந்தப் பொருள் கிடைக்கும்.

பணம் குறைவாக உள்ளவர்கள் குறித்த பொருளை வாங்க முடியாமல் அல்லது குறைந்த அளவில் பொருளை வாங்குகின்ற நிலைமை ஏற்பட, நுகர்வில் பாதிப்பு உண்டாகிறது.

இது பணவீக்க காலத்தில் ஏற்படக்கூடிய பொருளாதாரப் பெருமந்த நிலையாகும்.

இந்த நிலையைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளை பொருளியல் தத்துவங்களின் அடிப்படையில் சிந்தித்து செயலாற்ற வேண்டும்.

ஆனால் நம் நாட்டில் அதுதான் நடக்கவில்லை. ஆட்சித் தரப்பைப் பொறுத்தவரை பொருளியலாளர்களின் கருத்துக்கள் அவர்களுக்கு வெறுப்பாய் அமைகின்றது.

யார் என்ன கூறினாலும் அதுபற்றி எமக்குக் கவலையில்லை என்ற திமிர்த்தனத்தில் ஆட்சித் தரப்பினர் நடந்து கொள்கின்றனர்.

இத்தகைய சூழ்நிலையில் ஆட்சிமாற்றம் பற்றிய சிந்தனைகள் தென்பகுதியில் பேசுபடு பொருளாயிற்று.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் பலமிழந்துவிட்டது. கவிழ்ந்துவிட்டது என எதிர்க்கட்சிகள் விமர்சிக்கின்றன.

இந்தநிலையில், இலங்கையின் வீழ்ந்த பொருளாதாரத்தை தூக்கி நிறுத்துவதாக இருந்தால் அதற்கான ஒரே வழி ஆட்சி மாற்றத்தை அதிரடியாக ஏற்படுத்துவதுதான் என்ற கருத்து தென்பகுதியில் பரவலாகப் பேசப்படுகிறது.

ஆனால் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய வல்லமையும் ஆளுமையும் மக்கள் செல்வாக்கும் எதிர்க்கட்சிகளிடம் இல்லை என்பதையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

இந்த இடத்தில்தான் பாகுபலி திரைப்படத்தில் வருகின்ற இராஜமாதா சிவகாமி போல இலங்கைக்கு ஒரு இராஜமாதா தேவைப்படுகிறார்.

அந்த இராஜமாதா வேறுயாருமல்ல முன்பும் ஒரு தடவை மகிந்த ராஜபக்ஷ தரப்பை வீட்டுக்கு அனுப்பி வைத்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவே இலங்கையின் இராஜமாதாவாகவுள்ளார்.

அவர் மீண்டும் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தக் களமிறங்குகிறார். அவரோடு கட்சிகளும் இணைந்து கொள்கின்றனர்.

நடக்கப்போவது என்ன என்பதைப் பொறுத்திருந்து பார்க்கலாம்.

## அரசை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் தீர்மானங்கள் முன்னெடுக்கமாட்டோம்

### அமைச்சர் மகிந்த அமரவீர

(கொழும்பு)

அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் அரசியல் தீர்மானங்களை ஒருபோதும் முன்னெடுக்கமாட்டோம். அரசாங்கம் நெருக்கடிக்குள்ளானால் அதன் விளைவை முழு நாடும் எதிர்கொள்ள நேரிடும்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி இனிவரும் காலங்களில் இடம்பெறும் தேர்தல்களில் தனித்து போட்டியிட்டு ஆட்சியதிகாரத்தை நிச்சயம் கைப்பற்றும் என சுற்றாடற் துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி அரசியல் ரீதியில் வீழ்ச்சியடைந்துள்ளதாக ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

சுதந்திரக் கட்சி அரசியல் வரலாற்றில் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு ஆட்சியதிகாரத்தை கைப்பற்றியுள்ளது என்பதை அரச தலைவர்கள் நன்கு அறிவார்கள்.

சுதந்திரக் கட்சியை மறுசீரமைப்பது பிரதான நோக்கமாக காணப்படுகிறது. மாவட்ட மட்டத்தில் தொகுதி அமைப்பாளர் கூட்டங்கள் இடம்பெற்ற நிலையில் உள்ளன.

எதிர்வரும் நாட்களில் கட்சியின் செயற்குழு கூட்டத்தில் கட்சியை அடிப்படையாகக் கொண்ட தீர்மானங்கள் முன்னெடுக்கப்படும்.

ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன பெரமுன கூட்டணியில் சுதந்திரக் கட்சி பிரதான பங்காளிக் கட்சியாக உள்ளது.

அரசாங்கத்திற்கும் சுதந்திரக் கட்சிக்கும் இடையில் தற்போது ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்டு அரசியல் களத்தில் பல்வேறு விடயங்கள் குறிப்பிடப்படுகின்றன.

தற்போதைய சூழ்நிலையில் அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் அரசியல் ரீதியிலான தீர்மானங்களை முன்னெடுக்கமாட்டோம். அரசாங்கம் நெருக்கடிக்குள்ளானால் அதன் விளைவு நாட்டு மக்கள் மீது தாக்கம் செலுத்தும்.

ஆட்சியதிகாரத்தை கைப்பற்றுவது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதான நோக்கமாக உள்ளது. அதற்கான நடவடிக்கையினை முன்னெடுத்து வருகிறோம்.

எதிர்வரும் காலங்களில் இடம்பெறவுள்ள எத்தேர்தல்களிலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனித்து போட்டியிட்டு ஆட்சியதிகாரத்தை கைப்பற்றும் என்றார். (ம)

## மின்சார பொறியியலாளர்கள் சங்கம் இன்று சுகயீன விடுமுறை போராட்டம்

(கொழும்பு)

மின்சார சபையின் புதிய பொது முகாமையாளருக்கு எதிர்ப்பு தெரிவித்து இன்று சுகயீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபட தீர்மானித்துள்ளதாக மின்சார பொறியியலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

மின்சார சபையின் புதிய பொது முகாமையாளர் பதவிக்கு கடந்த 14ஆம் திகதி புதிய நபர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், சட்ட விரோதமாக இவ்வாறு நியமிக்கப்பட்ட இலங்கை மின்சார சபையின் புதிய பொது முகாமையாளர் அந்த பதவியிலிருந்து நீக்கப்படாவிட்டால் கடுமையான தொழிற்சங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என இலங்கை மின்சார பொறியியலாளர்கள் சங்கம் அண்மையில் அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (ம)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 19 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**வவுனியா பிரதேசத்தில்** நெளுங்குளம்நீர் வழங்கல் சபை, அறுகம் புல்வெளி, ஆசிக்குளம், பாரதிபுரம், கூமாங் குளம், கூமாங்குளம் கிருஷ்ணா மெடி கிளினிக், கூமாங்குளம் சாய் சிறுவர் இல்லம், நாகரிலுப்பைக்குளம், நெளுக்குளம் கலைமகள் பாடசாலையடி, நொச்சிக்குளம், அவுசதப்பிட்டிய பகல அளுத்வத்த, பாண்சின்னகுளம், பொன்னாவரசங்குளம், புபுதுகம, இராஜேந் திரகுளம், சாம்பல்தோட்டம் வீட்டுத்திட்டம், விநாயகபுரம் வீட்டுத்திட்டம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## மின்சார உற்பத்திக்கு இந்தியாவிலிருந்து எரிபொருள்

### மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே

(கொழும்பு)

இந்தியாவிடம் இருந்து எரிபொருளைப் பெற்று மின்சார துண்டிப்பு தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வு காண உள்ளதாக மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார். மின்சார உற்பத்திக்குத் தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்ளும் வகையில் நேற்று இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் பின் இவ்வறிவிப்பு வெளிவந்துள்ளது.

இந்திய எண்ணெய் கூட்டுத்தாபனத்திடம் இருந்தாவது எதிர்வரும் நாட்களுக்கான எரிபொருளைப் பெற்றுக் கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த விடயம் தொடர்பில் அவர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ளுமாறு இலங்கை மின்சார சபையின் தலைவருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தேவை ஏற்படின் இந்த கலந்துரையாடலில் பங்கேற்பதற்குத் தாம் தயாராகவுள்ளதாகவும் மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார். (ம)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



### மன அமைதியுடன் வாழுங்கள்

❖ நல்லவனாக இருந்து மற்றவர்களுக்கு இயன்ற நன்மைகளைச் செய்து வருவதே ஆன்மிக வாழ்வின் அடிப்படை நெறிமுறை.

❖ பகை, பொறாமை போன்ற தீயகுணங்களை வெளியிட்டால் அவை வட்டியும் முதலுமாக மீண்டும் புறப்பட்ட இடத்திற்கே வந்துவிடும்.

❖ பாமரனைப் பண்புள்ளவனாகவும், பண்புள்ளவனை தெய்வமாகவும் உயர்த்துவதே சமயத்தின் நோக்கம்.

❖ எந்தக் காலத்திற்கும் தியாகம் தான் வாழ்விற்குரிய விதியாக இருக்கப் போகிறது.

❖ மன அமைதி பெற்று வர்ழ்வது தான் மதங்களின் அடிப்படை லட்சியம். மதத்தின் பெயரால் மனிதன் சச்சரவு செய்வது கூடாது.

❖ இந்த உலகம் ஒரு பெரிய உடற்பயிற்சிக்கூடம். அதில் நம்மை வலிமையுடைய [illegible]

❖ [illegible] மிஞ்சிய அறிவும் ஆற்றலும் மனிதனை கீழ்நிலைக்குத் தள்ளிவிடும் சக்தி படைத்தவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி II

55

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



**பின்ன எண்கள் I**

| | | |
|---|---|---|
| ஒு | முக்கால் | 3/4 |
| உ | அரை | 1/2 |
| வ | கால் | 1/4 |
| ஸ | நாலுமா | 1/5 |
| ரூ | மூன்று வீசம் | 3/16 |
| ரு | மும்மா | 3/20 |
| ஹு | அரைக்கால் | 1/8 |
| உ | இருமா | 1/10 |
| பஉ | வீசம் | 1/16 |
| ப | ஒருமா | 1/20 |
| ஹூ | முக்காணி | 3/80 |
| சு | அரைமா | 1/40 |

**பின்ன எண்கள் II**

| | | |
|---|---|---|
| ஃ | காணி | 1/80 |
| ரு | அரைக்காணி | 1/160 |
| வத | முந்திரி | 1/320 |
| கிஉ | கீழரை | 1/640 |
| கீவ | கீழ்க்கால் | 1/1,280 |
| கிஸ | கீழ்நாலுமா | 1/1,600 |
| கிரூ | கீழ் மூன்று வீசம் | 3/5,120 |
| கிரு | கீழ்மும்மா | 3/6,400 |
| கிஹு | கீழரைக்கால் | 1/2,560 |
| கிஉ | கீழிருமா | 1/3,200 |

**பின்ன எண்கள் - III**

| | | |
|---|---|---|
| கிபஉ | கீழ் வீசம் | 1/5,120 |
| கிப | கீழொருமா | 1/6,400 |
| கிஹூ | கீழ் முக்காணி | 3/25,600 |
| கிசு | கீழரைமா | 1/12,800 |
| கிஃ | கீழ்காணி | 1/25,600 |

**கணக்கதிகாரம் என்ற நூல் பற்றி சில வரிகள்....**

இத் தகவல்கள் தமிழ்நாடு, ஸ்ரீ இராமகிருஷ்ணா மகளிர் கலை அறிவியல் கல்லூரியில் பணி புரிந்து வரும் முனைவர் மு.ரேவதியால் "கணிதத்தின் மகுடம் கணக்கதிகாரம்" என்ற தலைப்பில் எழுதப்பட்டு முத்துக்கமலம் இணைய இதழில் வெளியிடப்பட்ட கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்டது.

கணித வரலாற்றில் தமிழருக்கு என்றும் முதன்மையான இடம் உண்டு. பண்டைய தமிழ் இலக்கியங்கள் அக்காலப் புலவர்களின் கணித அறிவினைப் பறைசாற்றுகின்றன. கணிதம் ஒரு கலை என்பதனை 'கணக்கதிகாரம்' என்ற நூலால் அறியலாம். கொறுக்கையூர் காரிநாயனார் என்ற புலவரால் கணக்கதிகாரம் என்னும் கணித நூல் 15 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. இவர் காவிரி பாயும் சோழ நாட்டு மன்னர் வழி வந்தவர் என்றும், இவரின் தந்தை பெயர் புத்தன் என்றும் நூலின் சிறப்புப்பாயிரம் கூறுகிறது. இந்நூலில் காணப்படும் வியப்பான கணித முறைகளைப் பற்றி இங்கு கூறப்படுகிறது.

**கணித வரலாற்றில் தமிழருக்கு என்றும் முதன்மையான இடம் உண்டு. பண்டைய தமிழ் இலக்கியங்கள் அக்காலப் புலவர்களின் கணித அறிவினைப் பறைசாற்றுகின்றன. கணிதம் ஒரு கலை என்பதனை 'கணக்கதிகாரம்' என்ற நூலால் அறியலாம். கொறுக்கையூர் காரிநாயனார் என்ற புலவரால் கணக்கதிகாரம் என்னும் கணித நூல் 15 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது.**

இந்நூல் காரிநாயனாரின் கற்பனைத் திறனையும், கவிதை நயத்தையும், கணிதத்தில் இவர் பெற்றுள்ள புலமையையும் காட்டுகிறது. இந்நூல் முழுவதும் பக்க எண்கள் உட்பட, அனைத்துக் கணிதப் புதிர்களும், கணித [illegible] எண் உரு[illegible]தியே எழுதப்பட்டுள்ளன.

இந்நூல் ஆறு பிரிவுகளில் 60 வெண்பாக்களும் 45 புதிர்களையும் கொண்டது. நிலம் வழி - 23 பாக்கள்; பொன்வழி - 20 பாக்கள்; நெல்வழி - 6 பாக்கள்; அரிசி வழி - 2 பாக்கள்; கால் வழி - 3 பாக்கள்; கல் வழி - 1 பா; பொதுவழி - 5 பாக்கள் என்ற ஆறு வழி கணக்குகளையும் புலவர் 60 செய்யுட்களால் உணர்த்தி உள்ளார் என்பதனை;

**"ஆதி நிலம் பொன் நெல் அரிசி அகலிடத்து**
**நீதி தரும் கால்கல்லே நேரிழையாய் ஓதி**
**உறுவதுவா கச்சமைத்தேன் ஒன்றொழியா வண்ணம்**
**அறுபதுகா தைக்கே அடைத்து" (க.அ7ப.எ.26) என்ற பாடலால் அறியலாம்.**

இவ்வெண்பாக்கள் வாயிலாகப் பண்டைய கால நீட்டல், முகத்தல், நிறுத்தல் அளவைகள், தமிழ் முழு எண்களின் பெயர்கள், தமிழ் பின்ன எண்களின் பெயர்கள், உலோகக் கலவை முறைகள், நாழிகை விபரங்கள், சமுத்திரங்களின் அளவுகள், விவசாயம், அறுவடை, கூலி வழங்கும் முறை, வயல் வெளிகளை அளக்கும் முறை, வட்டத்தின் சுற்றளவு, பரப்பளவு காணும் முறை,

மிக நுண் ணிய அளவு முதல் மிகப் பெரிய அளவு வரையிலும் கணக்கிடும் முறை, பூமி சூரியனைச் சுற்றும் காலம், நிலவு சூரியனைச் சுற்றும் காலம், நிலவு பூமியைச் சுற்றும் காலம், பலாப் பழத்தைப் பிளக்காமல் அதன் உள்ளிருக்கும் சுளையின் எண்ணிக்கையை அறிந்து கொள்ளும் முறை, பூசணிக்காயை உடைக்காமலே அதன் உள்ளிருக்கும் விதையின் எண்ணிக்கையை அறிந்து கொள்ளும் முறை, ஒரு படி நெல் லில் எத்தனை நெல் இருக்கும், மாய சதுரக்கணக்குகள், எப்படி கூட்டினாலும் ஒரே விடை, வினா விடை கணக்குகள் என்று பலவற்றை ஆசிரியர் விளக்கியுள்ளார். அவற்றுள் ஒரு சில சான்றுகளைப் பின்வருமாறு காணலாம்.

**நிலத்தின் வளம் பற்றி அறிதல்**

**"உற்றசீர்பூமி அதனில் ஒளிபவளம்**
**கொற்ற வேற்கண்ணாய் குவளையெழும்மந்தை**
**இடைநிலத்து வேல்துராய் என்றி வைகள் ஆகும்**
**கடைநிலத்துவெண்மை உவர் காண்" (க.அ 2 ப.எ. 30).**

**இதன்பொருள்**

வெற்றி பொருந்திய வேலை [illegible]ளை உடையவளே! [illegible] நிலம்குவளை, சடை, காந்தை, காவேடு, காவேளை, பவளக்கொடி, புல், சேற்றுப்பயிர் என்ற ஏழும், மத்திம நிலம் செருப்படி, துராய், கண்டங்கத்திரி, வெல், அறுகு, சாமை, கேழ்வரகு என்ற ஏழும், அதமநிலம் ஓடு, தலை, பொரி, விரை, துடப்பம், உவரெழும் வெண்மை நிலம் பருத்திக்குமாம். ஆகியவை விளைவதன் மூலம் நிலத்தின் வளத்தினை அறிந்து கொள்ளலாம் என்கின்றார்.

**வெண்கலமும் பித்தளையும் செய்யும் முறை**

8 பலம் செம்பில் 2 பலம் ஈயம் உருக்கினால் அது வெண்கலம் என்றும் ஏழரை பலம் செம்பில் மூன்று பலம் துத்தம் இட்டு உருக்கினால் அது பித்தளை என்றும் கூறியுள்ளார். (க.அ 11 ப.எ.33).

பண்டைய நிறுத்தல் அளவைகளில் 32 குன்றிமணி = ஒரு வராகனெடை, 10 வராகனெடை = ஒருபலம், 8 பலம் = ஒரு சேர் என்ற அலகுகள் உள்ளன. (ஒரு பலம் என்பது கிட்டத்தட்ட 40.8 கிராம் அளவு இருக்கலாம்).

**உலகத்தின் அளவு**

உலகத்தின் அளவு பற்றி அவருடைய வெண்பா.

"சுளகேருலகநடுத்தோன்றியமா மேரும்
சிலைகொளத்தேங்குவிதம் எண்ணில் இயல்தேரும்
ஆறாறும் ஆயிரமியோசனை மூக்குத்தெற்கு
நூறாதுகாதம்நுவல்" (க.அ 13 ப.எ.34).

மகாமேருவுக்கு நான்கு திக்கும் நான்கு கோணமும் எட்டுத் திக்கும் ஆறாயிரம் யோசனை. ஆதலால் ஆறாயிரத்துக்கும் ஆறுக்கும் மாற (6000-6-31061000). இவ்வாறே நான்கு திக்கிற்கும் முப்பதாறாயிரத்திற்கும் நான்கிற்கும் மாற நூற்று நாற்பத்து நான்காயிரம் (10040 4000) யோசனை உயரமாக உலகம் இருக்கும் என்று முந்தைய நூல்கள் கூறுவதாகக் கூறியுள்ளார்.

12 முழம் - 1 சிறுகோல்; 500 சிறுகோல் - 1 கூப்பிடு தூரம்; 4 கூப்பிடுதூரம் - 1 காதம்; 4 காதம் - 1 யோசனை என்றுபண்டைய நீட்டலளவை கூறுகிறது.

**பலாச்சுளைக் கணக்கு**

"பலவின் சுளையறிய வேண்டு திரேல் ஆங்கு
சிறுமுள்ளுக்காம்பரு எண்ணி வருவதை
ஆறிற்பெருக்கியே ஐந்தினுக் கீந்திடவே
வேறெண்ணவேண்டாம் சுளை" (க.அ 41 ப.எ.57). (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7 பேர்...

மரணங்களின் மொத்த எண்ணிக்கை 15,218 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## ஜனாதிபதியால்...

ரீதியாக ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

பாராளுமன்றம் கடந்த டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி இந்த வருடத்துக்கான வரவு - செலவுத் திட்டத்தை அனுமதித்துக் கொண்ட பின்னர் ஜனவரி மாதம் 11 ஆம் திகதி வரை சபாநாயகரினால் ஒத்திவைக் கப்பட்டது. என்றாலும் அரசியலமைப்பில் ஜனாதிபதிக்கு இருக்கும் அதிகாரத்துக் கமைய கடந்த டிசம்பர் மாதம் 13ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விசேட வர்த்தமானி அறிவிப்பின் மூலம் பாராளு மன்ற கூட்டத்தொடரை ஜனவரி 18ஆம் திகதிவரை ஒத்திவைத்திருந்தார்.

பாராளுமன்ற கூட்டத்தொடர் ஜனாதி பதியினால் ஒத்திவைக்கப்பட்டால் அது மீண்டும் ஜனாதிபதியினால் ஆரம்பித்து வைக்கப்படவேண்டியது பாராளுமன்ற சம்பிரதாயமாகும்.

அரசியலமைப்பின் 33(2) யாப்பின் பிரகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இன்று 18ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு அரசின் கொள்கைப் பிரகடனத்தை பாராளுமன்றத்தில் முன்வைத்து பாராளு மன்றத்தை ஆரம்பிப்பார். (ம)

## குடும்பஸ்தர்...

கணேஸ்வீதி தேவிபுரம் பகுதியில் வசித்து வரும் 38 வயதுடைய ஆறுமுகம் பிரதீபன் என்ற குடும்பஸ்தரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டுள்ளதுடன், சடலம் பிரேத பரி சோதனைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ம)

## +688

கோவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள் ளது.

இதற்கமைய, நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 597, 035 ஆக அதிகரித் துள்ளது. (ம)

## யாழ்.பண்ணைப்...

சேர்ந்த 21 வயதான அனுராதன் அபிசாத் என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப் பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதில், மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்கள் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

எனினும் மோட்டார் சைக்கிள் ஓட்டிய நபர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

விபத்து தொடர்பான மரண விசா ரணையை யாழ்.போதனா வைத்திய சாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற் கொண்டார். (ம-18,33)

## அதிகாரத்தை...

கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டிற்காக சேவையாற்றவே தான் அதிகாரத்தைக் கோருவதாகவும், அதி காரத்தைக் கைப்பற்றும் முன் தன்னால் முடிந்தவரை சேவைகளை மேற்கொண்டு அது முன்னுதாரணமாக காண்பித்துள் ளது.

கொலைகாரர்கள், கொள்ளையர்கள், போதைவஸ்துகாரர்கள் மற்றும் திருடர் கள் ஆகியோரைப் பாதுகாக்க தான் ஒரு போதும் முன் நிற்கமாட்டேன். ஐக்கிய மக்கள் சக்திக்குள் இவ்வாறான மோசடிக் காரர்களுக்கு ஒருபோதும் இடமில்லை.

தம்மைச் சூழவுள்ளவர்களிடமிருந்து பெறப்பட்ட அறிவுரைகளால் இன்று நாடு முழுவதும் பேரழிவு ஏற்பட்டுள்ளது. இந் நாட்டு விவசாயிகள் அந்த துரதிர்ஷ்டமான கதியையே எதிர்நோக்கியுள்ளனர் என் றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## நாட்டின் நலன்...

பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹரினி அமரசூரிய இதனைத் தெரிவித் தார்.

பெரும்பாலான நாடுகள் உதவி வழங் கும்போது பல்வேறு நிபந்தனைகளை விதிக்கின்ற நிலையில் அரசாங்கத்திடம் கடுமையான திட்டம் எதுவும் இல்லை என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

சீனாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் நிதி பெறுவதற்காக அல்ல. ஆனால் கடுமையான வழிகாட்டுதல்கள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் இந்தியா நிதி வழங்குகிறது எனக் கூறினார்.

குறிப்பாக இந்தியா அரசியல் நிபந் தனைகளைக் கூட விதித்திருக்கலாம் என பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹரினி அமரசூரிய தெரிவித்தார். (ம)

## மாபியாக்களை...

டுத்த முயற்சியை தோற்கடிக்கும் வகை யில் அரிசி இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது என வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித் தார்.

வர்த்தகத்துறை அமைச்சில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

புத்தாண்டு காலத்தில் சந்தையில் ஒருகிலோகிராம் அரிசியின் விலையை 300 ரூபாய் வரை அதிகரித்து மக்களை நெருக்கடிக்குள்ளாக்கி அதனூடாக அர சாங்கத்தை பலவீனப்படுத்த அரிசி மாபி யாக்கள் முன்னெடுத்த முயற்சியை முறி யடிக்கும் வகையில் தற்காலிகமாக அரிசி இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட் டது.

லங்கா சதொசவில் இறக்குமதி செய்யப் படும் நாடு வகையிலான அரிசி ஒரு கிலோகிராம் 105 ரூபாய்க்கும் சம்பா அரிசி 130 ரூபாய்க் கும் விற்பனை செய்யப்படும்.

நுகர்வோர் அரிசி, சீனி உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை லங்கா சதொச விற் பனை நிலையங் களில் நிவாரண விலை அடிப்படை யில் பெற்றுக் கொள்ளலாம். அத்தியாவசிய உணவுப் பொருட் களை விநியோகிக் கும் நடமாடும் சேவையினை சதொச நிறுவனம் முன்னெடுத்துள் ளது என்றார். (ம)

## எரி...

கையிருப்பில் உள்ளதாக மின் சாரத் துறை அமைச்சர் காமினி லொக்குகே தெரி வித்துள்ளார்.

அத்துடன் களனி திஸ்ஸ மின் நிலையத்திற்கு தேவையான 3 ஆயிரம் மெற்றிக் தொன் எண் ணெயை இலங்கை பெற்றோலியக் கூட் டுத்தாபனம் வழங் கியதை தொடர்ந்து எதிர்வரும் 22 ஆம் திகதி வரை மின் விநியோகத்தை துண்டிக்காம லிருக்க எதிர்பார்த் துள்ளோம்.

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தில் இருந்து கிடைக்கப்பெறும் மின் வழமைக்கு திரும் பியுள்ளதால் மின் விநியோகத்தை தற் போதைய நிலையில் துண்டிக்காமலிருக்க அனைத்து முயற்சி களையும் முன்னெடுத்துள்ளோம்.

இலங்கை மின்சார சபைக்கு எரி பொருளை விநியோகிக்க முடியாது என வலுசக்தி துறை அமைச்சரால் குறிப்பிட முடியாது.

நாட்டில் எரிபொருள் இறக்குமதி மற் றும் எரிபொருள் விநியோகம் ஆகிய வற்றின் தனியுரிமை பெற்றோலியக் கூட் டுத்தாபனத்திற்கு உண்டு என்றும் அவர் கூறினார். (ம)

## 5ஆவது கோவிட்...

கூடல்கள் காரணமாக அடுத்த இரண்டு வாரங்களில் நாளாந்தம் பதிவாகும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிக் கும் என்றும் அச்சங்கம் கூறியுள்ளது.

ஒமிக்ரோன் மாறுபாட்டின் அதிக பரவல் தன்மை காரணமாக இலங்கையிலும் தொற்று நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளது என வைத்தியர் பிரசாத் ரணவீர தெரிவித்தார். (ம)





































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இணுவையூர் முருகஜீவ அறக்கட்டளை

## நான்காம் ஆண்டு நிறைவையொட்டிய

## சிறப்பு மலர்

"நன்று செய் இன்று செய்"

இணுவில் மேற்கு, இணுவில். **18.01.2022** ஸ்தாபிதம் : 18.01.2018





### ஆசிச் செய்தி

யாழ்ப்பாணம் இணுவில் பதியானது ஆலயங்கள், பாடசாலைகள், கலைஞர்கள், கல்விமான்கள் நிறைந்த இடமாகும். சைவத் தமிழர்களின் உயர்பண்பாட்டு விழுமியங்களின் அடையாளமாகவும் விளங்குகின்றது. இணுவையூர் முருகஜீவ அறக்கட்டளையின் நான்காவது ஆண்டு இன்றுடன் பூர்த்தியாவதையிட்டு ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

*"நன்று செய் இன்று செய்"* என்ற மகுடவாசகத்திற்கு இணங்க பல நற்காரியங்களை இவ் அறக்கட்டளையூடாக ஆற்றி வருவதை நான் அறிவேன். ஒரு தனி மனிதராக நின்று திரு.மு. புவீஸ்வரன் (J.P) முழுமையான தனது குடும்பத்தினரின் நிதிப்பங்களிப்போடு மிகக் குறுகிய காலத்தில் மிகப் பாரியளவிலான பல்வகைப் பணிகளை இவ்வறக்கட்டளையூடாக ஆற்றி உள்ளமையை யாவரும் அறிவர்.

எமது ஆலயத்திலும் இணுவையூர் முருகஜீவ அறக்கட்டளை அனுசரணையுடன் இலட்சார்ச்சனை காலத்தில் பத்திரிகைகளில் சிறப்பு மலர் வெளியீடுகள் செய்து வருவதுடன் ஆலயப் பணிகளில் ஸ்தாபகரான மு. புவீஸ்வரன் அவர்களும் அறக்கட்டளை இளைஞர்களும் ஈடுபட்டு வருவது போற்றுதற்குரியது.

இவ்வறக்கட்டளையானது கல்வியிலும் ஒழுக்கத்திலும் சமயநெறியிலும் ஏனைய துறைகளிலும் சிறந்து விளங்கவும் மேலும் சிறப்படையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*நன்றி*

**சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக் குருக்கள்**
ஆதீனகர்த்தாவும் சிவாச்சாரியாரும்
அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில்



### வாழ்த்துச் செய்தி

இணுவையூர் முருகஜீவ அறக்கட்டளையானது நான்காவது ஆண்டு நிறைவு பெறுவதையிட்டு மகிழ்ச்சியடைவதுடன் இவ் அறக்கட்டளையின் செயற்பாடுகளை பாராட்டி வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

திரு.மு.புவீஸ்வரன் அவர்களின் பெரு முயற்சியின் பயனாக உருவாக்கப்பட்ட இவ் அறக்கட்டளையானது முற்று முழுதாக அவரது குடும்பத்தினரின் நிதிப்பங்களிப்பின் மூலம் செயற்பட்டு வருவது என்பது சிறப்பான விடயமாகும். கடந்த 18.01.2018 இல் ஆரம்பிக்கப்பட்ட இவ் அறக்கட்டளையானது மிக குறுகிய நான்கு ஆண்டுகளில் பல சாதனைப் பணிகளை நிறைவேற்றியிருக்கின்றது. எதிர்காலத்திலும் மகத்தான பணிகளை செய்து எம்மக்களுக்கு பொருத்தமான சேவைகளையும் வழங்கவும் மென்மேலும் வளர எனது வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

**M.A சுமந்திரன்**
*பாராளுமன்ற உறுப்பினர் - யாழ். மாவட்டம்*



### வாழ்த்துச் செய்தி

"நன்று செய் இன்று செய்" என்னும் மகுடவாக்கியத்தைக்கொண்டு செயற்படுகின்ற இணுவையூர் முருகஜீவ அறக்கட்டளைக்கு இன்றுடன் நான்கு அகவை பூர்த்தியாகிறது. தமிழுக்கு உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டு. அவ்வாறே மனித உயிரின் மேம்பாட்டுக்கும் பன்னிரு பணிகள் தேவை என்பதை உணர்த்துவதைப்போல இவ் அறக்கட்டளையின் ஒட்டுமொத்தப் பணிகளையும் பன்னிரு வகைக்குள் உள்ளடக்கமுடியும்.

இணுவில் இந்துக் கல்லூரி அதிபராக நான் பொறுப்பேற்ற நாள் தொடக்கம் இன்றுவரை பாடசாலையின் தேவைகளை அறிந்து இவ் அறக்கட்டளையினூடாக பல்வேறு உதவிகளை வழங்கிவருகின்றமை குறிப்பிடக்கூடிய விடயமாகும். இவ்விடத்தில் எனக்கு முன்னைய காலத்திலும் பாடசாலைக்கான இவ் அறக்கட்டளையின் பணிகள் இடம்பெற்றதனையும் எப்போதும் நினைவிற் கொள்ள வேண்டும். எமது கல்லூரி பழைய மாணவனான திரு. மு. புவீஸ்வரன் அவரகளை என்றென்றும் வாழ்த்துவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். திரு. மு. புவீஸ்வரன் அவர்களின் சேவை என்றென்றும் அவசியமானது. இணுவையூர் முருகஜீவ அறக்கட்டளையினூடாக மென்மேலும் சிலதிட்டங்களை வெற்றிகரமாக செயற்படுத்த வேண்டும். ஸ்தாபகரும் அவரது பெற்றோரும் அவரது குடும்ப உறுப்பினர்களும் சகல ஐஸ்வரியங்களும் பெற்று வாழவேண்டும். அப்போதுதான் இவ் அறக்கட்டளையின் மூலம் சமூகமும் பயன் பெறும். உங்கள் அனைவருக்கும் இறைவன் ஆசி என்றென்றும் கிடைக்கவேண்டி இவ் வாழ்த்தினை சமர்ப்பிக்கின்றேன்.

திரு. வே. உதயமோகன்
*அதிபர் - இணுவில் இந்துக் கல்லூரி*

### அறக்கட்டளையின் பணிகள்

- இணுவையூர் முருகஜீவ அறக்கட்டளை கல்விப் பணி
- இணுவையூர் முருகஜீவ அறக்கட்டளை சமய கலாசாரப் பணி
- இணுவையூர் முருகஜீவ அறக்கட்டளை பசுமை இயக்கம்
- இணுவையூர் முருகஜீவ அறக்கட்டளை இசை மன்றம்
- இணுவையூர் முருகஜீவ அறக்கட்டளை மொழிகள் கற்கை நிலையம்
- இணுவையூர் முருகஜீவ அறக்கட்டளை தமிழ்ச் சங்கம்
- இணுவையூர் முருகஜீவ அறக்கட்டளை பட்டிமன்றக் குழு
- இணுவையூர் முருகஜீவ அறக்கட்டளை சிறுவர் கழகம்
- இணுவையூர் முருகஜீவ அறக்கட்டளை படிப்பகம்
- இணுவையூர் முருகஜீவ அறக்கட்டளை வாழ்வாதாரப் பணி
- இணுவையூர் முருகஜீவ அறக்கட்டளை அனர்த்த நிவாரணப் பணி
- இணுவையூர் முருகஜீவ அறக்கட்டளை மருத்துவப் பணி



### வாழ்த்துச் செய்தி

இணுவையூர் முருகஜீவ அறக்கட்டளை தனது நான்காவது ஆண்டில் கால்பதிப்பதையிட்டு பெருமகிழ்வடைவதுடன் இவ் வெற்றிகர செயற்பாட்டின் நன்நாளில் வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பேருவகையடைகின்றேன். ஓர் தனி மனிதர், இளைஞர் திரு. மு.புவீஸ்வரன் (J.P) அவர்களின் முயற்சியின் பயனாக முற்று முழுதாக அவரின் குடும்பத்தினரின் நிதிப் பங்களிப்பில் தனது தந்தையார் முருகையா, தாயார் ஜீவராணி ஆகியோரின் பெயரில் இணுவையூர் முருகஜீவ அறக்கட்டளை கடந்த 18.01.2018 இல் ஆரம்பிக்கப்பட்டது. இது சமூக சேவை நிறுவனமாகும். கடந்து சென்ற நான்கு ஆண்டுகளில் மிகக் குறுகிய் காலத்தில் பாரிய அளவில் பல்வகைப் பணிகளை இவ்வறக்கட்டளை ஆற்றி உள்ளமையை நான் அறிவேன். வறிய மாணவர்களுக்கான இலவச பிரத்தியேக வகுப்புக்கள், வருடாந்தம் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்குதல், பல்வேறுபட்ட சமூக நிறுவனங்களின் கோரிக்கைகளின் பேரில் பல்வேறு கிராமத்தைச் சேர்ந்த மாணவர்க்கு கல்வி உதவிகள் வழங்கல். எல்லாவற்றிற்கும் மேலாக கற்பதற்கு வீட்டில் இடவசதியற்ற மாணவர்கள் கற்பதற்கான இரு படிப்பகங்களை நிறுவுதல் போன்ற கல்விப் பணிகள் எண்ணற்றவை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நான் யா/ இணுவில் இந்துக் கல்லூரியில் அதிபராக இருந்த ஐந்து வருட காலப் பகுதியில் பழைய மாணவரான இவர் பாடசாலைக்கு தனது அறக்கட்டளையினூடு நிறைவேற்றிய பணிகள் ஏராளம். முக்கியமாக கிராமப்புறப் பாடசாலைகளில் மாணவர் எண்ணிக்கை சடுதியாக வீழ்ச்சி அடைந்து செல்லும் இக் காலகட்டத்தில் வீடுவீடாகச் சென்று மாணவர்களை எமது பாடசாலையில் இணைத்து பாடசாலை இன்றும் உயிரோட்டமுள்ளதாக இருப்பதற்கு இவரே காரணகர்த்தா ஆவார். மேலும் பாடசாலை வருடாந்த விளையாட்டுப் போட்டி, பரிசளிப்பு விழா மற்றும் பிற நிகழ்வுகளுக்கு பகுதியாகவோ/ முழுமையாகவோ இணுவையூர் முருகஜீவ அறக்கட்டளை அனுசரணை வழங்கியுள்ளது.

கல்விப் பணிக்கு மேலாக, வாழ்வாதாரப் பணி இவ்விடர் காலத்தில் பல கிராமங்களில் வறிய மக்களுக்கு இவ்வறக்கட்டளை மூலம் உதவி வழங்கப்பட்டது. இவருடைய அறக்கட்டளை மூலம் கலாசாரப் பணிகள், மொழிவிருத்திப் பயிற்சி வகுப்புக்கள், அனர்த்த நிவாரணப் பணிகள், கலை இலக்கியப் போட்டிகள் நடாத்துதல், இசை மன்றம் மற்றும் சிறுவர் கழகங்களை ஆரம்பித்து நடாத்துதல் போன்ற இன்னோரன்ன பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சேவை மனப்பாங்கு, தியாக உணர்வு என்பன அருகிவருகின்ற இந் நாட்களில் திரு.மு.புவீஸ்வரன் போன்ற துடிப்புமிக்க, நேர்மையும் பணிவுமுள்ள இளைஞர் இப்படியான ஓர் அறக்கட்டளையை ஆரம்பித்து சிறப்பாக நடாத்தி வருவது மிகவும் பாராட்டத்தக்க விடயமாகும்.

இவ் அறக்கட்டளை 18.01.2022 இல் தனது நான்காவது அகவையைப் பூர்த்தி செய்யும் இவ் வேளையில், குறுகிய நான்கு வருடங்களில் ஆற்றிய பணிகள் மகத்துவமானவை என்பதுடன், எதிர்வரும் காலங்களில் சிறப்புற எம் மக்களுக்குத் தேவையான, பொருத்தமான உதவிகளை வழங்கி மென்மேலும் வளர எனது வாழ்த்துக்களையும் ஆசிகளையும் இந் நேரத்தில் தெரிவிப்பதில் பேருவகை அடைகின்றேன்.

**திரு.திருநாவுக்கரசு தேவதயாளன்**
*ஓய்வுபெற்ற அதிபர்*
*யா/இணுவில் இந்துக் கல்லூரி*



### ஆசிச் செய்தி

இணுவையூர் முருகஜீவ அறக்கட்டளை கடந்த 2018ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இன்றுடன் நான்கு வருடங்களாகின்றது. இந்த நான்கு வருடங்களில் இவ்வறக்கட்டளை சமூகத்தில் ஆற்றிய பணிகள் அதிகம். குறிப்பாக பொருளாதாரத்தில் பாதிக்கப்பட்டு கல்வி கற்க முடியாத மாணவர்களுக்கு கல்வியையும், பிரத்தியேக வகுப்புக்களுக்கு செல்ல முடியாத மாணவர்களுக்கு பிரத்தியேக வகுப்பு வசதிகளையும், இசை வகுப்புக்களையும், சிறுவர் கழகங்களையும், அனர்த்த நிவாரணப் பணிகள் என்று எமது சமூகத்தில் பல்வேறுபட்ட பணிகளை இந்த அறக்கட்டளை செய்து வருவதையிட்டு மனதார வாழ்த்துகின்றேன்.

இன்று சேவை செய்ய வேண்டும் என்ற சிந்தனை இளைஞர்கள் மத்தியில் குறைந்து வருகின்ற இக்காலத்தில் இதன் ஆரம்பிப்பாளர், சமூகசேவையாளர் திரு மு. புவீஸ்வரன் அவர்கள், சமூகப் பணிகளைத் தன் பணிகளாக ஏற்று எல்லாத் துன்பங்களையும் சகித்து அன்புடன் பணியாற்றிக் கொண்டிருக்கும் இந்த துடிப்பான இளைஞனை மனதார வாழ்த்துகிறேன்.

**"கடவுள் உங்களையும் உங்கள் பணிகளையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக"**

ஆச்சிரம பணியில்
**சேவக் அபேட்சகன் ஜெரோம் தயாளகுணசீலன்**
*(ஜெரோம் அண்ணன்)*
*கிறிஸ்த சேவ ஆச்சிரமம், மருதனார்மடம்.*



### வாழ்த்துச் செய்தி

இணுவையூர் முருகஜீவ அறக்கட்டளை தனது நான்காவது ஆண்டில் இன்று காலடி பதிப்பதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். பலத்த சவால்களுக்கு மத்தியில் தனது தாய் தந்தையின் பெயரில் ஓர் அறக்கட்டளையினை தனி மனிதனாக தம்பி புவீஸ்வரன் அவர்கள் உருவாக்கினார். முழுமையாக தனது குடும்பத்தினரின் ஆதரவுடனேயே இதனை நடாத்தி வருகின்றார். கடந்த 10 வருடங்களுக்கு மேலாக எனக்கு தம்பி புவியை தெரியும். தெரிந்த காலம் தொடக்கம் அவர் மற்றவர்களிற்கு உதவும் மனப்பான்மையுடனேயே இருந்தார். யார் என்ன உதவி கோரினாலும் தன்னால் முடிந்தளவு உதவி செய்யும் குணம் உடையவர். அதன் வளர்ச்சியாகவே இணுவையூர் முருகஜீவ அறக்கட்டளையினை ஆரம்பித்தார். இன்று அந்த அறக்கட்டளையூடாக 12இற்கு மேற்பட்ட செயற்திட்டங்களை செயற்படுத்தி வருகின்றார். எனது அரசியல் பயணத்தில் பக்கபலமாக செயற்பட்டு வரும் தம்பி புவீஸ்வரனின் இணுவையூர் முருகஜீவ அறக்கட்டளை இன்னும் பல சேவைகளையாற்ற மனதார பாராட்டுகின்றேன்.

**சந்திரலிங்கம் சுகிர்தன்**
*முன்னாள் மாகாண சபை உறுப்பினர், வடக்கு மாகாணம்.*



### வாழ்த்துச் செய்தி

தந்தை முருகையா, தாயார் ஜீவராணி ஆகியோரின் பெயரில் இவர்களின் புதல்வனான திரு.மு.புவிஸ்வரன் (J.P) அவர்களின் முயற்சியினால் குடும்பத்தினரின் நிதிப்பங்களிப்பில் உருவான முருகஜீவ அறக்கட்டளை அமைப்பானது தனது நான்காவது ஆண்டில் காலடி எடுத்து வைப்பதனையிட்டும், அதற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதனையிட்டும் பெருமகிழ்வடைகின்றேன்.

இவ்வறக்கட்டளையினூடாக பல்வகையிலான சமூகப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வறிய மாணவர்களுக்கான இலவச வகுப்புக்களை நடத்துதல், மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்குதல் போன்றன அவற்றுட்சிலவாகும்.

இவ்வமைப்பினால் எமது கல்லூரிக்கு சென்றவருடம் வலம்புரி பத்திரிகையும், தினக்குரல் பத்திரிகை இவ்வருடம் முழுவதற்கும் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும் வறிய மாணவர்களுக்கும் இவ்வறக்கட்டளை மூலம் உதவிகள் வழங்கப்பட்டு வருவதுடன் மொழி விருத்திப் பயிற்சி வகுப்புக்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

முருகஜீவ அறக்கட்டளையின் ஸ்தாபகரான திரு.மு. புவீஸ்வரன் (J.P) அவர்களின் தியாக உணர்வும் பணிவும் பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். 18.01.2022இல் நான்காவது அகவையைக் கொண்டாடும் இந்நேரத்தில் மென்மேலும் பல சமூகப் பணிகளை முன்னெடுத்து மாணவர்களின் கல்விச் செழிப்பிற்கு வழிகோல வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**திரு. இளையதம்பி துரைசிங்கம்**
அதிபர் - யா/இணுவில் மத்திய கல்லூரி

(C-3565)

## காணி விற்பனைக்கு

சண்டிலிப்பாய் சந்திக்கு அருகாமையில்
20 பரப்புக் காணி
1 1/2 மற்றும் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட
நிலையில் விற்பனைக்கு உண்டு.
(நிலப்பரப்பு)

(9694)

**076 778 8273**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து நுணாவில் செல்லும்
A9 பிரதான வீதியில் நல்ல தண்ணீர் பொதுக் கிணற்றடி
அருகாமையில் 6 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- நிலப்பரப்பு 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- 14 அடி பாதையுடன்
- கைதடி பிள்ளையார் கோயிலில் இருந்து 500 மீற்றர் தூரம்

பார்வையிடும் நேரம் : காலை 6 மணிமுதல்
மாலை 6 மணிவரை
தரகர் தேவையில்லை, விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

(9684)

**077 814 7389 | 077 614 7333**

## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**

**UK-975/=Kg**

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-3471)

**0768226240** DHL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.01.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.